Koviloor Digital Library

ஹரே கிருஷ்ண மந்திரம்

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே



A·No: 2356
Q22

விளக்கம்:

அருள்திரு ஏ. ஸி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

Koviloor Digital Library



பகவான் ஸ்ரீசைதன்ய மகாப்பிரபுவும் அவருடைய சிஷ்யர்களும்

Koviloor Digital Library

2356
3218
Acc.No: 2356
கோவிலூர்-630 307
4-2
2/00



அருள்திரு. ஏ. ஸி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா.
(அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபகாசாரியர்)

ISKCON (இண்டர்நேஷனல் சொஸைட்டி ஃபார் கிருஷ்ண கான்ஷியஸ்னஸ்) என்பது உலகெங்கும் பக்தர் குழுக்களைக் கொண்ட ஸ்தாபனம். பக்தியோக நெறிக்குத் தன்னையே அர்ப்பணம் செய்துகொண்டிருப்பது. மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள். அல்லது நேரில் விஜயம் செய்யுங்கள். வகுப்புக்கள் மாலை நேரங்களில் நடைபெறுகின்றன.

Koviloor Digital Library



ரத ஊர்வலம் மேல் நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. பூரி நகரில் ஆண்டுதோறும் நடைபெறுவது போலவே ஸ்ரீ ஜகந்நாதப் பெருமான் தேரிலே எழுந்தருளி வீதி உலா வருகிறுர். உலகின் மிகப் பெரிய நகரம் ஒவ்வொன்றிலும் இப்போது இந்த ரதோற்சவத்தை இஸ்கான் நடத்தி வருகிறது.

Koviloor Digital Library 4-2

உலகைச் சுற்றிலும் உள்ள ஆலயங்கள்

ஆப்பிரிக்கா:

டர்பன், தென்னாப்பிரிக்கா: C/o போபட்லால் காரா, *201* கிரே தெரு, நைரோபி, கென்யா—P. O. Box *28946* (கி. ஆப்பிரிகா) *31568.*

ஆசியா:

சென்னை, இந்தியா: *50,* அஸ்பிரான் கார்டன்ஸ், கீழ்ப்பாக்கம், சென்னை-*600 010.*

பம்பாய், இந்தியா: ஹரே கிருஷ்ண லாண்டு, காந்தி கிராம் ரோடு, ஜுஹு, பம்பாய் *400 054/577315.*

கல்கத்தா, இந்தியா: *3* ஆல்பர்ட் ரோடு, கல்கத்தா *700 017/ 44-3757.*

ஹைதராபாத், இந்தியா: ஹரே கிருஷ்ண லாண்டு, நம்பள்ளி ஸ்டேஷன் ரோடு, ஹைதராபாத் (ஆந்திர பிரதேஷ்)

புது டெல்லி, இந்தியா: *19,* தோடர்மால் லேன், நியூ டெல்லி *110 001.*

மாயாபூர், இந்தியா: ISKCON இண்டர்நாஷனல் சென்டர் போஸ்ட், ஸ்ரீமாயாபூர் தாம், மே. வ. (நாடியா மாவட்டம்)

விருந்தாவனு, இந்தியா: கிருஷ்ண-பலராமா கோயில், சட்டிக் காரா ரோடு, ரமண் ரதி, மதுரா உ. பி./*178.*

ஜாகர்த்தா, இந்தோனேஷியா: Gg. கெலின்சி IV 8-A

கௌலூன், ஹாங்காங்: *38,* மோடி ரோடு 4/fl, டிசிம் ஷா டிசுய்/*3-668061.*

தைபே, டைவான்: *29–7,* ஹுங் சௌ, சௌத் ரோடு, செக்ஷன் *2.*

டோக்கியோ, ஜப்பான்: இசிகோம், *1–44* மிடா, மினுடோ—கு.

ஆஸ்திரேலியா:

அடிலெய்டு, ஆஸ்திரேலியா: *13A* ஃப்ரோம் தெரு, S. A./ *223-5115.*

மெல்போர்ன், ஆஸ்திரேலியா: *14,* பர்னெட் தெரு, St. கில்டா, விக்டோரியா *3182/663–1331.*

ஸிட்னி, ஆஸ்திரேலியா: *75,* விக்டோரியா தெரு, பெல் வியூ ஹில்/*69–5647.*

ஆக்லண்டு, நியூஸிலாந்து: *67,* கிரிப்பிள்ஹர்ஸ்ட் ரோடு, Mt. ஆல்பர்ட்/*686-666.*

ஐரோப்பா:

ஆம்ஸ்டர்டாம், ஹாலந்து: ஹெரன்கிராட் *96/020-249410.*

பெர்லின், மே. ஜெர்மனி: *1* பெர்லின் *31,* குர்புர்டென்டாம் *153/8-86-25-39.*

(பிராங்ஃபர்ட் A மெயின்)

மே. ஜெர்மனி: ஸ்கலாஸ், ரெட்டர்ஷாஃப், பெய் கோனிக்ஸ்டீன் டவுநஸ்/*06174-21357.*

ஹாம்பர்க், மே. ஜெர்மனி: *2,* ஹாம்பர்க் *54* கபிடேல்புஷ்விச் *20/570-53-82.*

மியூனிச், மே. ஜெர்மனி: *8042,* ஓபர்ஷ்லீஷீம், Dr. ஹாஃமெய் ஸ்டர்*7/3150421.*

Koviloor Digital Library

ஜெனிவா, சுவிட்ஜர்லாந்து: 9, செமின் து க்ரெடோ, 1213 பெடிட் லான்ஸி/921-318.
லண்டன், இங்கிலாந்து: 7, பரி ப்ளேஸ், ப்ளூம்ஸ்பரி WCI/01-405-1463.
லண்டன், இங்கிலாந்து: பக்திவேதாந்த மேனர், லெட்ச்மோர் ஹித், வாட்ஃபோர்டு WD2 8EP, ஹெர்ட்ஃபோர்டு ஷயர்/ராட்லெட், கோடு 9276, 7244.
மான்செஸ்டர், இங்கிலாந்து: 382, கிரேட் க்ளோஸ் தெரு, ஸால்ஃபோர்டு, 7, லங்க்ஸ்.
பாரீஸ், பிரான்ஸ்: 4, ரூ லே சூவர், 75016 பாரிஸ்/727,02,02.
ரோம், இதாலி: ஸெடி சென்டிரேல் வழி மிஸ்டிரெட்டா 2, (பியாஸா லோடி) 00182.
ஸ்டாக்ஹோம், ஸ்வீடன்: ஸோலாகவாகென் 22, 16352, ஸ்பாங்கா/760-0852.

லத்தீன் அமெரிக்கா:

போனஸ்அயர்ஸ், அர்ஜென்டீனா: ஈக்வடார் 473.
காரகாஸ், வெனிஸுலா: கால்லூயி ரோச் No. 61, கோலினுஸ், டி லா சவுகுவாரமாஸ்/76-74-57.
மெக்ஸிகோ ஸிடி, மெக்ஸிகோ: கோபர் நேடர், டிபர்சியோ, மான்டீல், 45, சான் மைகேல், மெக்ஸிகோ ஸிடி 18/277-3124.
ரியோ பீட்ராஸ், போர்டோ ரிகோ: 55 ஜார்ஜ் ரோமனி சாந்தா ரிடா 00925/(809) 764-1373.
சான்டா டோமிங்கோ, டொமினிகன் ரிபப்ளிக்: கால் கயேடானோ ரோட்ரிக்ஸ் No. 36.

அமெரிக்கா:

(யு. எஸ். கானடா) ஆன் ஆர்பர், மிச்சிகன்: 718 W மாடிஸன் 48103/(313) 665-6304.
அட்லாண்டா, ஜார்ஜியா: 24 N. E. 13வது தெரு, 30309/(404) 892-9042.
ஆஸ்டின், டெக்சாஸ்: 1003 E, 14வது தெரு, 78702/(512) 476-1558.
பாஸ்டன், மாஸ்ஸாசூசெட்ஸ்: 72 காமன்வெல்த் அவெனு 02116 (617) 782–8892.
போல்டர் க்ரீக், கலிஃபோர்னியா: 257 ஸில்வன் வே 95006/(408) 338–4465.
பஃபலோ, நியூ யார்க்: 132 பிட்வெல் பாக்வே 14222/(716) 882–0281.
சிகாகோ, இல்லிநாய்ஸ்: 1014 எமர்சன் தெரு, ஏவன்ஸ்டன் 60201/(302) 475–9126.
க்ளீவ்லாண்ட், ஓஹியோ: 15720 யூக்ளிட் அவெ. E. க்ளீவ்லண்ட் 44112/(216) 851-9367.
டல்லாஸ், டெக்சாஸ்: 5430 குர்லி அவெ. 75223/(214) 827-6330.
டென்வர், கொலராடோ: 1400 செர்ரி தெரு, 80220/(303) 333–5461.

Koviloor Digital Library

டெட்ராய்ட், மிச்சிகன்: *8311 E.* ஜெப்பர்ஸன் அவெ. *48214/(313) 824–6000.*

கெயின்ஸ்வில், ப்ளோரிடா: *921* SW டெப்போ அவெ. *32601/(904) 377-1496.*

ஹானலுலு, ஹவாய்: *1578* ஆல ஆவ்லோ லூப், *96819/(808) 839-2210.*

ஹூஸ்டன், டெக்சாஸ்: *107* நாக்ஸ் தெரு *77006/(713) 869–7809.*

லகூனு பீச், கலிஃபோர்னியா: *3764* ரமோனு அவெ. *92651/(714) 494-9172.*

லாஸ் ஏன்ஜெலஸ், கலிஃபோர்னியா: *3764* வாட்சேகா அவெ. *90034/(213) 871-0717.*

மியாமி, ப்ளோரிடா: *4001* கும்குவாட் அவெ. கோகோனெட் க்ரூவ், *33133/(305) 448-7893.*

மான்ட்ரீல், கனடா: *2051-53* புளூரி அவெ. கியூபெக் (514) *849-4319.*

நியூ ஆர்லியன்ஸ், லூயிஸியானு: *2936* எஸ்பிளனேட் அவெ. *70119/(504) 448–1313.*

நியூ விருந்தாவனு, வெஸ்ட் வர்ஜீனியா: RD *1*, பாக்ஸ் *620* மெக்ரியரி ரிட்ஜ், மோண்ட்ஸ்வில், மே. வர்ஜீனியா *26041/(304) 845-2790.*

நியூ யார்க், நியூ யார்க்: *439* ஹென்ரி தெரு, ப்ரூக்லின், *11231/(212)596-9658.*

ஒட்டாவா, கனடா: *224* பெஸ்ஸிரெர் தெரு, ஒன்டாரியோ/ *(613) 236-9091.*

ஃபிலடெல்பியா, பென்சில்வேனியா: *424* E வுட்லான் தெரு. *19144/(215) 849-1767.*

பிட்ஸ்பர்க், பென்சில்வேனியா: *4626* ஃபோர்ப்ஸ் அவெ- *15213/(412) 683–7700.*

போர்ட்லண்ட், ஒரேகான்: *2805* SE ஹாதார்ன் *97214/(503/ 234-1755.*

ஸெயின்ட் லூயி, மிஸ்ஸூரி: *4544* லக்லீட் அவெ. *63108 (314) 361–1224.*

ஸாண்டியாகோ, கலிஃபோர்னியா: *3303* செகண்ட் அவெ. *92103/(714) 291-7778.*

ஸான்ஃபிரான்ஸிஸ்கோ, கலிஃபோர்னியா: *455* வாலென்ஷியா தெரு, *94103/(415) 861–6464.*

ஸீட்டில், வாஷிங்டன்: *400, 18th* அவெ. ஈஸ்ட் *98102/(206) 329-9348.*

டோரோன்டோ, கனடா: *187,* ஜெர்ரார்டு தெரு, கிழக்கு ஒன்டாரியோ M 5 A 2 E *5/(416) 922-5415.*

வான்கூவர், கனடா: *1774* மேற்கு 16th அவெ. வான்கூவர்- 9 B. C./*(604) 732-8422.*

வாஷிங்டன், டி. ஸி.: ''Q'' தெரு, N. W. *20009/(202) 667-3516.*

வின்னிகெனடா: *160* ஹோம் தெரு, மானிடோபா (204) பக்,*775-3575.*

Koviloor Digital Library

ஆன்மிக குருவின் வாழ்க்கைச் சுருக்கம்

அருள்திரு பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா என அழைக்கப்படும் அபய சரண் தேவ், 1896-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் கல்கத்தா நகரில் பிறந்தார். 1920-ஆம் ஆண்டு தம் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தத்துவம், ஆங்கிலம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் சிறப்புப் பட்டம் பெற்றார். அதன் பிறகு பெரியதோர் இரசாயனஆலையில் மேலாளராகப் பணி ஏற்றார். 1922-ஆம் ஆண்டு, இந்தியா, பெர்லின், லண்டன் முதலிய இடங்களில் அறுபத்து நான்கு கௌடிய வைணவ மடங்களை நிறுவிய அருள்திரு பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகாராஜ் அவர்களைச் சந்திக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. சமீபத்தில், பிரபுபாத சுவாமிகள் தமது ஞானகுருவைச் சந்தித்த சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்து கூறினார்: ''நான் முதன் முதலில் குரு தேவரைச் சந்தித்தபோது அவர் என்னைப்பற்றி, 'இந்தப் பையன் சிரத்தையுடன் கேட்கிறான்; இடையில் எழுந்து போவதில்லை; இவனை என்னுடைய சீடனாக வரித்துக் கொள்ளப் போகிறேன்' என்றார். என்னுடைய தகுதி அதுதான். என்னுடைய குருநாதர் எப்போது பேசப் போகிறார் என்று கேட்பேன்; பிறகு அதைக் கேட்க உட்கார்ந்து விடுவேன். சில சமயம் புரியும்; சில சமயம் புரியாது. மற்றவர்கள் கலைந்து சென்று விடுவார்கள். நான் அவ்விடத்தைவிட்டு அகலமாட்டேன். அதனால்தான் குருநாதர், 'இந்தப் பையன் மிகவும் விருப்பமாகக் கேட்கிறான்' என்று குறிப்பிட்டார். நான் அப்போது அவற்றையெல்லாம் ஆழ்ந்து கேட்டுக்கொண்டதால் இப்போது பிரசாரம் செய்ய முடிகிறது. ஒருவன் எதையுமே கவனமாகக் கேட்டுப் புரிந்து கொண்டால் பிறகு தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும்.''

1933-ஆம் ஆண்டு அலகாபாத் நகரில் அபய சரண் தேவ் சீடனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். 1936-ஆம் ஆண்டு அருள்திரு பக்தி சித்தாந்த சரஸ்வதி சுவாமிகள் முக்தி அடைவதற்குச் சில தினங்கள் முன்பு, அவர் பிரபுபாத சுவாமிகளை நோக்கி மேலை நாட்டில் ஆங்கிலத்தில் கிருஷ்ண பக்தியைப் பரப்பும்படி பணித்தார்.

இந்தப் பணியில் முதலில் அவ்வளவு ஆர்வத்துடன் தாம் ஈடுபடவில்லை என்று பிரபுபாத சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ண பக்தி இயக்கத்தின் முன்னோடியும் பக்தி சித்தாந்த சரஸ்வதி சுவாமிகளின் தந்தையுமான தவத்திரு பக்தி வினோத தாக்கூர் பகவத் கீதைக்கு ஓர் உரை எழுதியிருந்தார். அதில், 'உயிருள்ள உடலிலிருந்து எப்படி ஒருவனால் ஆத்மாவைப் பிரிக்க முடியாதோ அதே போல தன் குருதேவரின் கட்டளையை மீறி உண்மையான சீடனால் வாழ முடியாது' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வாசகம் பிரபுபாத சுவாமிகளின் உள்ளத்தைத் தொட்டது. அன்றிலிருந்து இப்பணியில் கொஞ்சம் கொஞ்சமாக ஈடுபட்டு, தம் வாழ்நாள் முழுவதையும் தம் குருநாதரின் அருள் வாக்கை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துக் கொண்டார். 1959-ஆம் ஆண்டு அவர் துறவறம் மேற்கொண்டார். தமது எழுபதாவது வயதில், 1965-ஆம் ஆண்டு, தமது புனிதப் பணியை நிறைவேற்ற அவர் நியூ யார்க் நகரம் சென்றடைந்தார்.

சுவாமிகள் தம் உபன்னியாசங்களை ஒலிப்பதிவு செய்து கொள்கிறார். பின்னர் அவை புத்தகங்களாக வெளி வரும்.

Koviloor Digital Library

தற்போது அவர் ஐந்து புத்தகங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார். இப் புத்தகங்கள் அவர் கடவுள் உணர்வுடன் வாழ்வதை விவரிக் கின்றன. அவர் கூறுவது போல ஒருவர் ஆத்ம ஞானத்தைப் பெற்ருல் பல புத்தகங்களை எழுத முடியும். பக்தர்களின் தகுதிகளில் முக்கியமானதொன்று கவிதா ஞானம். பிரபுபாத சுவாமிகள் மனத்தாலும் பேச்சாலும், செயலாலும் கிருஷ்ண பரமாத்மா விடமே எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிருர். கிருஷ்ண பரமாத்மாவின் குணுதிசயங்களை எடுத்துக் கூறிக் கொண்டும், கிருஷ்ண பக்தி இயக்கம் வளர்வதற்கான வழிமுறைகளை விளக்கிக் கொண்டும், பரமாத்மா பற்றிய நூல்களை எழுதிக் கொண்டும் அந்தப் பிரம்மானந்தத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிருர். பகவத் கீதையின் ஏழாவது அத்தியாயத்தில், ஆயிரம் பேர்களில் ஒரு சிலரே பரிபூர்ண நிலையை எய்த முயலுகிருர்கள்; அப்படி முயலுபவர்களில் ஆயிரத்தில் ஒருவர்கூட கிருஷ்ண பரமாத்மாவை அறிந்தவரில்லை என்று கூறப்பட்டுள்ளது. கீதையில் 18-ஆவது அத்தியாயத்தில், ''கிருஷ்ண பக்தியை எங்கும் பரவச் செய்பவரே என் ஆத்மார்த்த பக்தன்'' என்று பகவான் அருளியிருக்கிருர்.

பிரபுபாத சுவாமிகளின் ஞானகுருவான அருள்திரு பக்தி சித்தாந்த சரஸ்வதி ஒரு முறை மிருதங்கத்தையும் அச்சு இயந்தி ரத்தையும் ஒப்பிட்டுப் பேசினூர். 'மிருதங்கத்தின் ஒலி சில தூரம் கேட்கும்; அச்சு இயந்திரத்தின் ஒலி உலக முழுவதும் ஒலிக்கும். ஆகையால் அச்சுக்கூடம் ஒரு பெரிய மிருதங்கமாகும்' என்ருர் அவர். உலக முழுவதிலுமுள்ள மனித இனத்திற்குச் சேவை செய்துவரும் பிரபுபாத சுவாமிகளின் நூல்களை வெளியிடுவ தற்காக Iskcon அச்சுக்கூடம் நிறுவப்பட்டது.

1968-ஆம் ஆண்டு மாக்மில்லன் கம்பெனி பகவத் கீதையை சுவாமி பிரபுபாத சுவாமிகளின் உரையோடு வெளியிட்டது. கீதை யானது வேதங்களின் சாரம். இந்த ஒரு நூல் மட்டுமே ஒருவனை சம்சார துக்கத்திலிருந்து கரையேற்றி, கிருஷ்ண பரமாத்மாவிடம் நிலையான பற்றுதலை ஏற்படுத்தி அவருக்கு நிரந்தர சேவை செய் வதில் ஈடுபடுத்திவிடக் கூடியது. சுவாமிகள் முதலில் எழுதிய நூல் கம்பெனி வெளியிட்ட நூலை விட மிகவும் விரிவானது. இந்த விரிவான நூலை, சுருக்கம் ஏதுமின்றி, அப்படியே வெளியிடும் வேலையை அச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. பிரபுபாதர் எழுதிய நூல்களில் முக்கியமானது மற்ருென்று அவர் எழுதிய 'சைதன்ய மகாப் பிரபுவின் உபதேசங்கள்' என்ற நூலாகும். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் புனித அவதாரம் செய்தவரும் 'ஹரே கிருஷ்ண' மந்திரத்தால் இறைவனை அடைய முடியும் என்று உபதேசம் செய்தவருமான செய்தன்ய மகாப் பிரபுவைப்பற்றி இந் நூலில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. தவயோகி ரூப கோஸ்வாமி அவர்களின் நூலையொட்டி 'பக்தி ரஸாமிருத ஸிந்து' என்ற நூல் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பிரபுபாத சுவாமிகள் தற்போது, சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பூமியில் அவதாரம் செய்த கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளைப் பற்றி 'கிருஷ்ணு' என்ற நூலில் எழுதி வருகிருர். இது தவிர வேதாந்த சூத்திரம், சைதன்ய சரிதாமிருதம், 12 காண்டங்கள் கூடிய பாகவதம் ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்த நூல்கள் அனைத் துமே கிருஷ்ண பக்தர்களின் பரம்பரையால் அங்கீகாரம் செய்யப் பட்டவை. சுவாமிகளின் வாழ்க்கையின் குறிக்கோள் கிருஷ்ண

Koviloor Digital Library

பக்தியைச் சற்றும் மாறுதலின்றி உலகில் பரப்ப வேண்டுமென்பதே. பரிபூர்ணமான இறைவனை அடைவதற்கு வேத சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி குரு-சிஷ்ய பரம்பரையாக வரக்கூடிய ஞானமே சாதனம். அவ்வாறின்றி ஏட்டுப் படிப்பாலும், வீண் ஆராய்ச்சி களாலும் அறிய முடியாது.

அருள்திரு பிரபுபாத சுவாமிகள் இத்தனை நூல்களை எழுதிக் கொண்டிருப்பதால் ஓய்ந்து இருக்கிறார் என்று கூற முடியாது. அவர் நேரிலும் அன்யோன்யமாகவும் தமது சீடர்களுடைய பிரச்னை களைத் தீர்த்து வைத்து வழிகாட்டுகிறார். இக் கலியுகத்தில் ஆன்மிக வாழ்வு சிக்கலான சோதனையாகிவிட்டது. ஞானகுருவான நமது சுவாமிகள் பக்தர்களின் பிரச்னைகளைத் தீர்க்க, கிருஷ்ண பக்தியைப் புகட்டி பல்வேறு இடங்களிலுள்ள நிர்வாகிகளுக்கும், சீடர் களுக்கும் தினம் 25 கடிதங்களாவது எழுதுகிறார். அவர் ஒரே இடத் தில் தங்கிவிடுவதுமில்லை. பல கேந்திரங்களுக்கு நேரில் சென்று உரை நிகழ்த்துகிறார். தம் பக்தர்களின் முன்னேற்றத்துக்கான பொறுப் பைத் தாமே ஏற்றுக் கொள்கிறார். தாம் ஒருவரைச் சீடனாக ஏற்றுக் கொள்ளும்போது சுவாமிகள் இறைவனின் பேரானந்த நிலையை அவனுக்குக் காட்ட உறுதியளிக்கிறார். ‘எல்லோரும் ஒரு குருவை அடைகிறார்கள்; நாமும் ஒருவரை அடைவோம்’ என்ற எண்ணத்தில் வீண் கௌரவத்துக்காகவும் ஆசைக்காகவும் ஒரு குருவை நாடு வதில் பயனேதுமில்லை. அவரது உபதேசங்களைத் தன் உயிர்போல் மதித்து, தன் உயிர், உடல், ஆன்மா அனைத்தும் அவரே என்ற உறுதியான நம்பிக்கையுடன் உண்மையான குருவினுடைய பாதார விந்தங்களில் சரணமடைவதாலும் நாள் முழுவதும் அவருக்குப் பணிவிடை செய்வதாலும் தவறி விழுந்த ஆத்மா ஆன்மிக உலகிற்கு உந்தி விடப்படும். குருவினுடைய பரிபூர்ண அருளைப் பெற்றவர் ஆன்மிக மார்க்கத்தில் அதிக அளவுக்கு முன்னேற முடியும். ஒரு தூய பக்தன் தன்னுடைய முன் உதாரணத்தாலும் உபதேசத் தாலும் பலரைச் சிறந்த பக்தர்களாக்கலாம். ஆகையால் ஆன்மிக மேன்மை பெறுவதில் ஆர்வமுள்ளவர்கள் குருவைக் கடவுளென மதித்து வணங்க வேண்டும். ஏனெனில் இறைவனின் பிரதிநிதியாக விளங்கும் குரு மூலமாகத்தான் ஒருவன் கடவுளின் அருளைப் பெற முடியும். வாசக நேயர்கள் இந்தத் தத்துவத்தைச் சிரத்தையோடு நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

அருள்திரு ஏ.ஸி. பக்திவேதாந்த
சுவாமி பிரபுபாதா



ஓம்விஷ்ணு பாத பக்தி சித்தாந்த
சரஸ்வதி மகராஜ் பிரபுபாதா

கௌர கிஷோரதாஸ் பாபாஜி
மகராஜ்

ஸ்ரீல பக்தி விநோத தாகூர்

Koviloor Digital Library

சிஷ்ய பரம்பரை

இந்தச் சிஷ்ய பரம்பரை என்பது ஆன்மிகக் குருமார்களின் வரிசையைக் குறிக்கிறது. அவர்களே வேத ஞானத்தை நமக்கு வழங்கியவர்கள். வேதம் என்று குறிப்பிடும்போது நான்கு வேதங்கள், அதாவது சுருதிகள் மட்டுமல்ல, புராணங்கள், மகாபாரதம் போன்ற உப இலக்கியங்களாகிய ஸ்மிருதிகளும் அதில் உள்ளடங்கும். இந்தக் குரு பரம்பரைக்கு மூலம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே ஆவார். அவர்தான் ஆதிகுரு என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அவரே வேத ஞானத்தை இந்தப் பிரபஞ்சம் தோன்றியபோது பிரம்மாவுக்கு அளித்தவர். அதர்வ வேதத்தில் இதற்கு ஆதாரம் தென்படுகிறது. (யோ பிரம்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதம் ச கபயாதி ஸ்ம கிருஷ்ண:) பாகவத புராணத்தில் இந்த வேதத்தைப் பிரம்மா நாரதமுனிக்கு அருளியதாகவும் நாரதர் வியாசருக்குக் கூறியதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக வியாச தேவர்தான் வேதங்களுக்குக் கர்த்தா. வேத ஞானம் என்பது வியாச தேவருக்கும் முன்பே செவிவழி வந்த செல்வமாக, பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் வியாச தேவர்தான் அதை எழுத்து வடிவமாகத் திகழச் செய்தவர். வியாச தேவர் காலம் முதல் வழி வழியாக வந்த பரம்பரையில் மத்வாச்சாரியரும் நாளடைவில் ஸ்ரீசைத்தன்ய மகாப் பிரபுவும் தோன்றியருளினார்கள். சைத்தன்ய மகாப் பிரபுவுக்குப் பிறகும் இந்தக் குரு பரம்பரை தொடர்ந்து இப்போது அருள்திரு ஏ. ஸி. பக்திவேதாந்த பிரபுபாத சுவாமிகள்வரை வந்திருக்கிறது.

இந்தப் பேரருளாளர் கீழ் நாட்டவரும் மேல் நாட்டவரும் ஒன்றுபோலக் கற்றறியும் வண்ணம் பல தொகுதிகளாக இந்த வேதநூல்களை எழுதியிருக்கிறார். வேதங்கள். புராணங்கள் முதலானவற்றின் விளக்கத்தைப் படிப்பதற்கு வாய்ப்பான அரிய சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. எழுதியிருப்பவர் வேத சாஸ்திரங்களை நன்கு கற்றிருப்பவர் மட்டுமல்ல, வேத சாஸ்திர பரம்பரையில் முறையாக வந்திருப்பவரும் ஆவார். ஆதி குருமார்கள் கேள்வி வழியிலேயே இந்த வேத சாஸ்திரம் பரவுவது நல்லது என்று விரும்பினார்கள். பகவத் கீதையின் நாலாவது அத்தியாத்தில் ''யேவம் பரம்பரா—ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது:'' என்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குரு மூலமாகக் கற்கும் சிஷ்ய பரம்பரை முறையே சிறந்ததாக அது உறுதி செய்கிறது.

உள்ளே இருப்பதைத் தெளியக் காட்டுகிற கண்ணாடி போன்று இருப்பவரே சரியான குரு. 'நூல் இயற்றி வெளியிடு, அல்லது மடி' என்பது இன்று நிலவும் கருத்து. புதியன காண்பதே கல்வியறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை இது குறிக்கிறது. ஆனால் வேதத்தின் அடிப்படைக் கருத்து இதற்கு நேர் மாறானது. அறிவு அல்லது ஞானம் என்பதெல்லாம் நேரே கிருஷ்ணனிடமிருந்துதான் வருகிறது என்றே வேதம் வலியுறுத்திக் கூறுகிறது. எனவே புதிய வியாக்கியானமோ கொள்கையோ எதுவாக இருந்தாலும் அதெல்லாம் கலப்படமான போலி ஞானம் தான். வைரக்கல்லைச் செதுக்கிய பிறகு அதில் புதிதாகச் சேர்ப்பதோ மாற்றுவதோ எப்படிப் பொருந்தும்? அதுபோலத்தான் ராகத்திலோ ஓவியத்திலோ புதிதாக இன்னொன்றைக் கலப்பதும்.

Koviloor Digital Library

சங்கித வித்வான் மேளகர்த்தா ராகத்தில் ஒரு ஸ்வரத்தை அதிகப் படியாகச் சேர்த்தால் ராக லட்சணமே சிதைந்து வீணுகிவிடும். அதேபோல எவனே ஒரு பைத்தியக்காரன் கையிலே ஒரு பிரஷ்ஷை எடுத்துக்கொண்டு ஓவியக் கலைஞன் உருவாக்கிய வண்ணச் சித்திரத்தை மாற்றியமைக்க நினைத்தால் அவன் ஒரு வீரனுகக் கருதப் படமாட்டான்; குற்றவாளியாகக் கொள்ளப்படுவான். இதே போல வேதம் என்பது அனுதிகாலமாக இருந்து வரும் சாசுவத மான தெய்விகத் தத்துவ ஞானம் என்று மகரிஷிகளால் போற்றப்பட்டு வருகிறது. இதற்குத் திருத்தங்களோ புதிய கற்பனை விளக்கங்களோ செய்ய முற்படுவது — அப்படிச் செய்வது ஒரு ஃபாஷனுக இருக்கிறது— சித்திரசாலைப் பைத்தியக்காரன் செயலைப் போலத்தான் இருக்கும்.

எனவே அருள்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களுடைய அருள் வாக்குகளும் நூல்களும் வேத சாஸ்திரம் கூறும் உண்மைகளை அவற்றிலுள்ளவாறு சிஷ்யருக்குச் சிஷ்யர் சொல்லி வழி வழியாக வந்ததென்று கொள்ளல் மறுக்கவொண்ணுதது. இதைக் காட்டிலும் இந்தியப் பண்பாட்டினையும் புதிர் போன்ற தத்துவார்த்தங்களையும் புரிந்து விளங்கிக் கொள்வதற்கு வேறு சிறந்த வாய்ப்பு இல்லை.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் கிளைகள் அன்ருடம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்தியாவில் பிரசாதம் வழங்குகிருர்கள்

Koviloor Digital Library

சாந்தியை தரும் சாதனம்

அருள்திரு பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா
(அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபகாசாரியர்)

நவீன நாகரிகத்தில் பெரிய குறை என்னவென்ருல் பிறருடைய சொத்தை ஆக்கிரமிப்பது. இதனுல் இயற்கையின் விதிகளில் அனுவசியமான குழப்பம் ஏற்படுகிறது. இயற்கையின் விதிகள் உறுதியானவை. அவைகளை ஒருவராலும் புறக்கணிக்க முடியாது. கிருஷ்ண சாட்சாத்காரத்தை அடைந்தவர்தான் இயற்கையின் விதிகளை வெற்றிகொள்ள முடியும். அப்படிப்பட்ட ஞானியே மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் உலகத்தில் வாழ முடியும்.

ஒரு நாடு எப்படிச் சட்டத்தினுலும் ஒழுங்கு முறையாலும் காப்பாற்றப்படுகிறதோ அப்படியே பிரபஞ்சத்தின் நுண்ணிய பகுதியான இந்தப் பூவுலகும் இயற்கையின் விதிகளால் காப்பாற்றப்படுகிறது. இவ்வுலகம் கடவுளுடைய சக்தியின் பல்வேறு அம்சங்களில் ஒன்று. ஆகையால் இது கடவுளுடைய சொத்து. ஆனுல் இதில் நாகரிகம் அடைந்தவர்களாகச் சொல்லிக்கொண்டு வசிக்கும் நாம் உண்மைக்குப் புறம்பாகத் தனி உரிமையும் பொது உரிமையும் கொண்டாடுகிறேம். நமக்கு மன அமைதி வேண்டுமென்ருல் இந்தத் தப்பான எண்ணத்தை நம் மனத்திலிருந்து அகற்ற வேண்டும். அதனுல் நமக்கு உலகத்தின் மேலுள்ள பற்றுதலும் விடுபடும். மனிதவர்க்கத்தின் மேல் ஆதிக்கம் செலுத்த உரிமை கொண்டாடுவதே, உலகத்திலுள்ள குழப்பத்திற்கு முழுமையான காரணமாகும்; அல்லது பெருமளவிற்காவது காரணமாகிறது.

நாகரிகமடைந்தவர்களாகச் சொல்லிக் கொள்ளும் முட்டாள்களான மனிதர்கள் கடவுளுடைய சொத்துக்கு உரிமை கொண்டாடுகிருர்கள். ஏனென்ருல் அவர்களுக்குக் கடவுளுணர்வு கிடையாது. தெய்வ உணர்வற்ற சமூகத்தில் சாந்தியும் சந்தோஷமும் கிடைக்காது. ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தாமே பிரபஞ்சம் அனைத்துக்கும் மஹேசுவரனுகவும், போக்தா அதாவது அனுபவிப்பவராகவும், பர்த்தா அதாவது தாங்குபவராகவும் நன்மை பயப்பவராகவும் இருப்பதாகச் சொல்கிருர். மக்கள் இதை அறிந்து உலக அமைதிக்கு இதைச் சாதனமாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உலகத்தில் சாந்தி ஏற்படும்.

ஆகையால் உங்களுக்கு அமைதி வேண்டுமென்ருல் எல்லாம் கிருஷ்ண மயம் (ஸர்வம் வாசுதேவ மயம்) என்ற உணர்வு ஏற்பட வேண்டும். இதற்குச் சாதகம் செய்வதில் தனியாகவும் கோஷ்டியாகவும் ஈடுபடலாம். பகவானுடைய புனிதமான திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். இது மிகவும் சுலபமானது. நாம ஸ்மரணமும், நாம ஸங்கீர்த்தனமும் உலக அமைதியை அடைவதற்கு அநுபவ சித்தர்களால் அங்கீகரிக்கப்பட்ட முறை. ஆகையால் எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவின் லோக சாட்சாத்வத்தை அறிந்து அனுபவிக்க—

''ஹரே க்ருஷ்ண, ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண க்ருஷ்ண, ஹரே ஹரே
ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே

என்று ஜபித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

இந்த நாம ஸங்கீர்த்தனம் உன்னதமானது; சுலபமானது; எல்லோராலும் செய்யக் கூடியது. இது சைதன்ய மகாப் பிரபு கால் 480 ஆண்டுகளுக்கு முன்னுல் அருளிச் செய்யப்பட்டது. இப்போது இது எல்லோருக்கும் கிடைக்கின்றது. இந்தச் சுலபமான நாம ஸங்கீர்த்தனத்தைச் செய்துவருவீர்களாக. இதன் ஆதாரத்தை நாம் ஸ்ரீமத் பகவத் கீதையில் காணலாம். விடுபட்டுப்போன கடவுள் உணர்வை இதனுல் நாம் திரும்பப் பெறலாம். உலக அமைதியையும் ஆனந்தத்தையும் அப்போது அதிவிரைவில் அடைவோம்.



"நான் கடவுளல்ல; நீயும் கடவுள் அல்ல.
நாம் அனைவரும் கடவுளின் தொண்டர்கள்."

Koviloor Digital Library

ஹரே கிருஷ்ணா மந்தரம்

— அருள்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா —
(அகில உலக கிருஷ்ணபக்தி இயக்கத்தின் ஸ்தாபகாசிரியர்)

''ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம, ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே'' என்று நாம ஸ்மரணம் செய்யும்போது ஏற்படும் அதிர்வு மண்ணுலகைத் தாண்டி விண்ணுலகுடன் தொடர்புகொள்கிறது. இதுவே கடவுளுணர்வைத் திரும்பிப் பெறுவதற்கு உயர்ந்த சாதனம். நம்முடைய ஜீவாத்மா பரமாத்மாவினுடைய அம்சம். ஆனால் அனாதிகாலமாக அவித்யா வாசனைகளாலும், உலகாயத பிணைப்புக்களாலும் அது மாசடைந்திருக்கிறது. நாம் மாயையின் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். மாயை என்றால் என்ன? யாமா, ஸா மாயா. அதாவது எது இல்லையோ அது மாயை. இது ஒரு பொய்யான தோற்றம். இறைவனுக்குச் சொந்தமான இந்த உலகத்தில், இயற்கையின் கருணை விதிகளுக்குக் கட்டுப்பட்டிருந்த போதிலும், நாம்தான் எஜமான் என்று அதற்கு உரிமை கொண்டாடுகிறோமே, இது தான் பொய்யான தோற்றம். ஒரு வேலைக்காரன் சர்வ வல்லமையுள்ள எஜமானனைப்போல் நடித்தால் அது பொய்யான பாவனை அல்லவா? இயற்கையின் வளங்களை நாம் பறிக்க முயற்சி செய்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் அதன் பலவிதமான சிக்கல்களில் மேன்மேலும் அகப்பட்டுக் கொள்கிறோம். ஆகையினால் நாம் இயற்கையை வெல்லக் கடுமையாகப் போரிட்டபோதிலும், மேன்மேலும் அதனிடம் புகல் அடைகிறோம். கானல் நீரைப் போன்ற இந்தப் பொய்யான லட்சியத்திற்காகப் போரிடுவதை, கிருஷ்ண சாட்சாத்காரத்தினால் அல்லது உணர்வினால் நிறுத்தி விடலாம்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே–கிருஷ்ண பரமாத்மாவினுடைய சொரூப ஞானத்தை அடைவதற்கு ஹரே கிருஷ்ண மந்திரமே சாலச் சிறந்தது. இந்த மந்திரத்தை உச்சரிப்பதனால் ஏற்படும் அதிர்வு நம்முடைய மனத்திலுள்ள அழுக்குகளை அகற்றும். மனத்திலுள்ள மாசுகளுக்கு ஆதாரம் நான், எனது என்ற அகங்காரமும் மமகாரமும் ஆகும். அதாவது நான் காண்பதெல்லாம் எனக்கு அடிமை. நான் அதன் எஜமானன் என்ற தப்பான எண்ணம்.

கிருஷ்ண உணர்வு செயற்கை முறையில் ஒருவனுடைய மனத்தில் திணிக்கப்படும் பொருள் அல்ல. இது ஆதிகாலம் முதல் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள தொடர்பு. நாம ஸங்கீர்த்தனத்தினால் ஏற்படுகிற அதிர்வு, உறைந்து அல்லது மறைந்து கிடக்கும் தொடர்பைக் கிளப்பி விடுகிறது. இந்த யுகத்துக்கு நாம ஸங்கீர்த்தனம் என்ற இந்தச் சுலபமான மார்க்கமே உகந்தது. மோட்ச சாதனமான இந்த மகா மந்திரத்தை உச்சரிப்பவர் இதைச் சாதகம் செய்யச் செய்யப் படிப்படியாக பகவானுடைய சொரூப ஞானத்தையடைந்து சமாதிநிலை என்ற மெய்ம்மறந்த பிரம்மானந்த நிலையை அடைகிறார். உலக வாழ்வில் பலர் கீழ்ப்பட்டு மிருகங்களைப் போல் இந்திரிய சுகத்திற்காகப் பாடுபடுகிறார்கள். இதற்கு ஒரு படி மேலாக உள்ளவர் பற்றுதலைத் துறக்க ஆராய்ச்சி செய்கிறார். இவருக்கும் மேலானவர் எல்லாவற்றிற்கும் காரணமாக உள்ளவரை அதாவது ஆக்குபவராகவும் அழிப்பவராகவும் உள்ளவரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார். இவ்வாறு புலன்

Koviloor Digital Library

களையும், மனத்தையும், புத்தியையும் தாண்டி, மெய்ம்மறந்த நிலையில் பகவானுடைய சொரூப ஞானத்தை அடைகிறார். இதுவே சமாதி நிலை. இதுவே பிரம்மானந்த நிலை. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஓதிவரும் சாதகன் அதன் நாதத்தினாலும், அதிர்வினாலும் புலன்களையும் மனத்தையும் புத்தியையும் கடந்து விடுகிறான். ஆகையால் மந்திரத்தின் அர்த்தம் நமக்குத் தெரிய வேண்டியதில்லை. மனத்தளவிலோ, புத்தியளவிலோ அதைச் சொல்லுவதற்குத் தனித் தகுதியும் தேவையில்லை. ஆனால் மெய்ம் மறந்த நிலையில் குற்றம் ஒன்றும் புரிந்துவிடாமல் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் சாதகனுக்குச் சமாதி நிலையோ சொரூப ஞான மோ ஏற்படாது. இதை அடைவதற்கு எட்டு நிலைகள் உள்ளன. அவை: 1. பேச்சு அடங்கிவிடும் 2. வேர்வை பெருகும் 3. மயிர்க்குச்சு உண்டாகும் 4. குரல் தடுமாறும் 5. உடலில் நடுக்கம் ஏற்படும் 6. உடல் இருப்பது மறந்து போகும் 7. மெய்ம்மறந்த நிலையில் கூக்குரல் போடுவார் 8. சமாதி நிலையில் பிரம்மானந்தத்தில் லயித்திருப்பார். ஆனால் இந்த மந்திரத்தைக் கொஞ்ச காலம் உச்சரிப்பதற்குள்ளாகவே பக்தன் பரவசமாகிக் கூத்தாடுவதுண்டு. இதை நாம் கண் கூடாகப் பார்த்திருக்கிறோம். குழந்தைகூட ஆட்டபாட்டத்தில் பங்கு கொள்ளலாம். உலக வாழ்வில் மூழ்கி இருப்பவனுக்கு இந்த நிலை வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகும். ஆனால் அவனும் கூடிய சீக்கிரத்தில் இதை அடையக் கூடும். மெய்யன்பர்கள் பக்திப் பரவசத்துடன் இந்த மந்திரத்தைச் சங்கீர்த்தனம் செய்யும்போது கேட்பவர்கள் மனமுருகி விடுவார்கள். ஆகையால் இதை மெய்யன் பர்களின் வாய்வழியாகவே கேட்கவேண்டும். அப்போதுதான் கைமேல் பலன் கிடைக்கும். நாஸ்திகர்களோ, பக்தியற்றவர் களோ இதைப் பாடுவதைக் கேட்க வேண்டாம். பாம்பின் உதடு தீண்டிய பாலும் விஷமல்லவா?

ஹரே என்ற பதம் பகவானுடைய சக்தியை அழைப்பதாகும். ராம, கிருஷ்ண என்ற பதங்கள் சச்சிதானந்த மயமான பரப்பிரம் பத்தை அழைப்பதாகும். ராம நாமமும் கிருஷ்ண நாமமும் பிரம்மானந்த மயமான பரமாத்மாவைக் குறிக்கின்றன. ஹரே என்று கூப்பிடும்போது பரப்பிரம்மத்தின் செயலாற்றும் சக்தி, பரமாத்மாவை அடைய உதவி செய்கிறது.

மாயா சக்தியும் பரமாத்மாவின் ஒரு சக்தி வடிவம்தான். பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மாவுக்கும் சக்தி உண்டு. ஜீவாத்ம சக்தி, ஹரே என்ற பரப்பிரம்மத்தின் சக்தியுடன் தொடர்பு கொள்ளும்போது சகஜமான ஆனந்தம் உண்டாகிறது. இந்த மகா மந்திரத்தில் ஹரே, கிருஷ்ண, ராம என்ற மூன்று பதங்கள் ஆத்ம பேதத்தை கொடுக்கும் தன்மையுள்ளவை. நாம ஸ்மரணம் பகவானை யும் அவருடைய சக்தியையும் அழைப்பதாகும். மாயையின் பிடியில் கட்டுண்டிருக்கும் ஆத்மாவைக் காப்பாற்றுவதற்காகவே இந்த அழைப்பு. ஒரு குழந்தை தன் தாயைக் கூப்பிடுவதற்குக் கத்துவது போல் இந்த மந்திரம் பகவானை அழைக்கிறது. ஹரே என்ற தாய், தந்தையின் அருளைக் குழந்தைக்கு அளிப்பதற்கு உதவி செய்கிறாள். பகவான் பக்தனுக்கு தம் சொரூப ஞானத்தையும் சொரூப சுகத்தையும் அருள் பாலிக்கிறார்.

சண்டை சச்சரவும், வஞ்சக வேஷமும் தாண்டவமாடும் இந்தக் காலத்தில் இந்த ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தைக் காட்டிலும் ஆத்ம ஞானத்தையடைவதற்கு வேறு சிறந்த மந்திரம் எதுவுமே கிடையாது.

Koviloor Digital Library

ஹரே கிருஷ்ண மந்தரம்

— அருள்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா —
(அகில உலக கிருஷ்ணபக்தி இயக்கத்தின் ஸ்தாபகாசிரியர்)

''ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம, ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே'' என்று நாம ஸ்மரணம் செய்யும்போது ஏற்படும் அதிர்வு மண்ணுலகைத் தாண்டி விண்ணுலகுடன் தொடர்புகொள்கிறது. இதுவே கடவுளுணர்வைத் திரும்பிப் பெறுவதற்கு உயர்ந்த சாதனம். நம்முடைய ஜீவாத்மா பரமாத்மாவினுடைய அம்சம். ஆனால் அனாதிகாலமாக அவித்யா வாசனைகளாலும், உலகாயத பிணைப்புக்களாலும் அது மாசடைந்திருக்கிறது. நாம் மாயையின் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். மாயை என்றால் என்ன? யாமா, ஸா மாயா. அதாவது எது இல்லையோ அது மாயை. இது ஒரு பொய்யான தோற்றம். இறைவனுக்குச் சொந்தமான இந்த உலகத்தில், இயற்கையின் கருணை விதிகளுக்குக் கட்டுப்பட்டிருந்த போதிலும், நாம்தான் எஜமான் என்று அதற்கு உரிமை கொண்டாடுகிறோமே, இது தான் பொய்யான தோற்றம். ஒரு வேலைக்காரன் சர்வ வல்லமையுள்ள எஜமானனைப் போல் நடித்தால் அது பொய்யான பாவனை அல்லவா? இயற்கையின் வளங்களை நாம் பறிக்க முயற்சி செய்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் அதன் பலவிதமான சிக்கல்களில் மேன்மேலும் அகப்பட்டுக் கொள்கிறோம். ஆகையினால் நாம் இயற்கையை வெல்லக் கடுமையாகப் போரிட்டபோதிலும், மேன்மேலும் அதனிடம் புகல் அடைகிறோம். கானல் நீரைப் போன்ற இந்தப் பொய்யான லட்சியத்திற்காகப் போரிடுவதை, கிருஷ்ண சாட்சாத்காரத்தினால் அல்லது உணர்வினால் நிறுத்தி விடலாம்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே–கிருஷ்ண பரமாத்மாவினுடைய சொரூப ஞானத்தை அடைவதற்கு ஹரே கிருஷ்ண மந்திரமே சாலச் சிறந்தது. இந்த மந்திரத்தை உச்சரிப்பதனால் ஏற்படும் அதிர்வு நம்முடைய மனத்தி லுள்ள அழுக்குகளை அகற்றும். மனத்திலுள்ள மாசுகளுக்கு ஆதாரம் நான், எனது என்ற அகங்காரமும் மமகாரமும் ஆகும். அதாவது நான் காண்பதெல்லாம் எனக்கு அடிமை. நான் அதன் எஜமானன் என்ற தப்பான எண்ணம்.

கிருஷ்ண உணர்வு செயற்கை முறையில் ஒருவனுடைய மனத்தில் திணிக்கப்படும் பொருள் அல்ல. இது ஆதிகாலம் முதல் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள தொடர்பு. நாம ஸங்கீர்த்தனத்தினால் ஏற்படுகிற அதிர்வு, உறைந்து அல்லது மறைந்து கிடக்கும் தொடர்பைக் கிளப்பி விடுகிறது. இந்த யுகத்துக்கு நாம ஸங்கீர்த்தனம் என்ற இந்தச் சுலபமான மார்க்கமே உகந்தது. மோட்ச சாதனமான இந்த மகா மந்திரத்தை உச்சரிப்பவர் இதைச் சாதகம் செய்யச் செய்யப் படிப்படியாக பகவானுடைய சொரூப ஞானத்தையடைந்து சமாதிநிலை என்ற மெய்ம்மறந்த பிரம்மானந்த நிலையை அடைகிறார். உலக வாழ்வில் பலர் கீழ்ப்பட்டு மிருகங்களைப் போல் இந்திரிய சுகத்திற்காகப் பாடுபடுகிறார்கள். இதற்கு ஒரு படி மேலாக உள்ளவர் பற்றுதலைத் துறக்க ஆராய்ச்சி செய்கிறார். இவருக்கும் மேலானவர் எல்லாவற்றிற்கும் காரணமாக உள்ளவரை அதாவது ஆக்குபவராகவும் அழிப்பவராகவும் உள்ளவரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார். இவ்வாறு புலன்

Koviloor Digital Library

களையும், மனத்தையும், புத்தியையும் தாண்டி, மெய்ம்மறந்த நிலையில் பகவானுடைய சொரூப ஞானத்தை அடைகிறார். இதுவே சமாதி நிலை. இதுவே பிரம்மானந்த நிலை. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஓதிவரும் சாதகன் அதன் நாதத்தினாலும், அதிர்வினாலும் புலன்களையும் மனத்தையும் புத்தியையும் கடந்து விடுகிறான். ஆகையால் மந்திரத்தின் அர்த்தம் நமக்குத் தெரிய வேண்டியதில்லை. மனத்தளவிலோ, புத்தியளவிலோ அதைச் சொல்லுவதற்குத் தனித் தகுதியும் தேவையில்லை. ஆனால் மெய்ம் மறந்த நிலையில் குற்றம் ஒன்றும் புரிந்துவிடாமல் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் சாதகனுக்குச் சமாதி நிலையோ சொரூப ஞான மோ ஏற்படாது. இதை அடைவதற்கு எட்டு நிலைகள் உள்ளன. அவை: 1. பேச்சு அடங்கிவிடும் 2. வேர்வை பெருகும் 3. மயிர்க்குச்சு உண்டாகும் 4. குரல் தடுமாறும் 5. உடலில் நடுக்கம் ஏற்படும் 6. உடல் இருப்பது மறந்து போகும் 7. மெய்ம்மறந்த நிலையில் கூக்குரல் போடுவார் 8. சமாதி நிலையில் பிரம்மானந்தத்தில் லயித்திருப்பார். ஆனால் இந்த மந்திரத்தைக் கொஞ்ச காலம் உச்சரிப்பதற்குள்ளாகவே பக்தன் பரவசமாகிக் கூத்தாடுவதுண்டு. இதை நாம் கண் கூடாகப் பார்த்திருக்கிறோம். குழந்தைகூட ஆட்டபாட்டத்தில் பங்கு கொள்ளலாம். உலக வாழ்வில் மூழ்கி இருப்பவனுக்கு இந்த நிலை வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகும். ஆனால் அவனும் கூடிய சீக்கிரத்தில் இதை அடையக் கூடும். மெய்யன்பர்கள் பக்திப் பரவசத்துடன் இந்த மந்திரத்தைச் சங்கீர்த்தனம் செய்யும்போது கேட்பவர்கள் மனமுருகி விடுவார்கள். ஆகையால் இதை மெய்யன் பர்களின் வாய்வழியாகவே கேட்கவேண்டும். அப்போதுதான் கைமேல் பலன் கிடைக்கும். நாஸ்திகர்களோ, பக்தியற்றவர் களோ இதைப் பாடுவதைக் கேட்க வேண்டாம். பாம்பின் உதடு தீண்டிய பாலும் விஷமல்லவா?

ஹரே என்ற பதம் பகவானுடைய சக்தியை அழைப்பதாகும். ராம, கிருஷ்ண என்ற பதங்கள் சச்சிதானந்த மயமான பரப்பிரம் பத்தை அழைப்பதாகும். ராம நாமமும் கிருஷ்ண நாமமும் பிரம்மானந்த மயமான பரமாத்மாவைக் குறிக்கின்றன. ஹரே என்று கூப்பிடும்போது பரப்பிரம்மத்தின் செயலாற்றும் சக்தி, பரமாத்மாவை அடைய உதவி செய்கிறது.

மாயா சக்தியும் பரமாத்மாவின் ஒரு சக்தி வடிவம்தான். பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மாவுக்கும் சக்தி உண்டு. ஜீவாத்ம சக்தி, ஹரே என்ற பரப்பிரம்மத்தின் சக்தியுடன் தொடர்பு கொள்ளும்போது சகஜமான ஆனந்தம் உண்டாகிறது. இந்த மகா மந்திரத்தில் ஹரே, கிருஷ்ண, ராம என்ற மூன்று பதங்கள் ஆத்ம பேதத்தை கொடுக்கும் தன்மையுள்ளவை. நாம ஸ்மரணம் பகவானை யும் அவருடைய சக்தியையும் அழைப்பதாகும். மாயையின் பிடியில் கட்டுண்டிருக்கும் ஆத்மாவைக் காப்பாற்றுவதற்காகவே இந்த அழைப்பு. ஒரு குழந்தை தன் தாயைக் கூப்பிடுவதற்குக் கத்துவது போல் இந்த மந்திரம் பகவானை அழைக்கிறது. ஹரே என்ற தாய், தந்தையின் அருளைக் குழந்தைக்கு அளிப்பதற்கு உதவி செய்கிறாள். பகவான் பக்தனுக்கு தம் சொரூப ஞானத்தையும் சொரூப சுகத்தையும் அருள் பாலிக்கிறார்.

சண்டை சச்சரவும், வஞ்சக வேஷமும் தாண்டவமாடும் இந்தக் காலத்தில் இந்த ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தைக் காட்டிலும் ஆத்ம ஞானத்தையடைவதற்கு வேறு சிறந்த மந்திரம் எதுவுமே கிடையாது.

Koviloor Digital Library

ISKCON (இஸ்கான்) என்றால் என்ன?

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் 1966-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அருள்திரு பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதராலும் அவருடைய அமெரிக்க சிஷ்யர்களாலும் நிறுவப்பட்டது. பக்தி யோகமும், பக்தி மார்க்கமும் வாழ்க்கையின் லக்ஷயம் என்ற கொள்கையுடைய பக்தர்கள்தான் இந்தச் சங்கத்தில் இருக்கிறார்கள். பரஸ்பர முயற்சியால் சமையல் செய்யும்போதும், சாப்பிடும்போதும், அலுவலகத்தில் வேலை செய்யும்போதும், தெருவில் போகும்போதும் அவர்கள் கிருஷ்ண மந்திரத்தை ஓதிக்கொண்டு கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அருள்திரு பிரபுபாத சுவாமிகள் ஒரு தூய பக்தர். அவரை மெய்யன்புடன் பின்பற்றும் சிஷ்யர்களெல்லோரும் அவரைப்போல் தூய்மையான பக்தர்களாக வாய்ப்பு இருக்கிறது. அவரிடம் உபதேசம் பெற்ற சிஷ்யர்கள் ஜனனம், மரணம், மூப்பு, வியாதி முதலிய அவஸ்தைகளிலிருந்து விடுதலை பெற ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தை எப்போதும் ஓதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் அங்கத்தினர்கள் 1. மாமிசம் சாப்பிடுவதில்லை 2. பிற மாதர்களுடன் புணர்வதில்லை 3. போதை வஸ்துக்கள் உபயோகப் படுத்துவதில்லை. 4. சூதாடுவதில்லை. எளிய வாழ்க்கையை மேற்கொண்டு உயர்ந்த எண்ணங்களுடன் தத்தம் கடமைகளைச் செய்வதிலும், இறை தொண்டு செய்வதிலும், நாம சங்கீர்த்தனம் செய்வதிலும் முறையாக ஈடுபடுகிறார்கள்.

கிருஷ்ண பக்தியுணர்வு ஆத்ம சுத்தியைக் கொடுக்கிறது. பின்பற்றும் வழியும் பயனும் வெளிப்படையானவை. இதற்கு எந்த விதக் கட்டணமும் இல்லை. அவரவருடைய திறமைக்கும் ஆர்வத்திற்கும் தகுந்த முறையில் தொண்டு புரியலாம். கவிகளும் எழுத்தாளர்களும் தங்களுடைய காணிக்கைகளைக் கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் அனுப்புகிறார்கள். அவைகளை இந்தச் சங்கம் பிரசுரம் செய்கிறது. வியாபாரிகள் இந்தப் புஸ்தகங்களை விற்பதுடன் பல கோவில்களைக் கட்டிக்கொடுக்கிறார்கள். குடும்பஸ்தர்கள் தங்கள் குழந்தைகளையும் கடவுளுணர்வில் வளர்க்கிறார்கள். கணவனும் மனைவியும் கூட்டாக ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறார்கள். எல்லோரும் சங்கீர்த்தனம் செய்கிறார்கள். ஹரே கிருஷ்ண மந்திரத்தை மக்களுடைய நலனுக்காகத் தெருக்களில் ஓதி முழக்கம் செய்கிறார்கள். (Chanting) சங்கீர்த்தனம் தான் ஹரே கிருஷ்ண இயக்கத்தின் ஜீவநாடி. இதைச் சேர்ந்த 30 கேந்திர நிலையங்களிலும் சங்கீர்த்தனம் தினசரி பலதடவை செய்யப் படுகிறது. மற்றப் பணிகள் இதற்கு அடுத்தபடிதான். சைதன்ய மகாப் பிரபுவின் வழியில் சங்கீர்த்தனம்தான் பிரதானமாகவுள்ளது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே சைதன்ய மகாப்பிரபு என்ற சிறந்த பக்தராக அவதரித்தார் என்று வேதநூல்கள் தெரிவிக்கின்றன. ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால் இந்தக் கல்மஷ சித்தமுள்ள கலியுகத்தில் கடவுளையடைவதற்கு இறைவன் நாமத்தை இடையறாது ஓதுவது ஒன்றே சிறந்த மார்க்கம் என்று கிரந்தங்களிலிருந்து அவர் புரிந்து கொண்டார். நாம சங்கீர்த்தன பக்தியை அவர் பிரசாரம் செய்தார். அதன்படி இந்த இயக்கம் 5 முதல் 30 பக்தர்கள் உள்ள கோஷ்டிகளாக இயங்கி வருகிறது. இதில் ஆண்கள் காவித் துணியும், பெண்கள் சாயச் சேலையும் அணிந்துகொண்டு ஸ்ரீகிருஷ்ண நாமத்தைக் கானம் செய்து கொண்

Koviloor Digital Library

டும் மெய்ம்மறந்த நிலையில் ஆடிக் கொண்டும் பஜனை செய்து கொண்டும் வருகிறார்கள்.

சங்கீர்த்தனம் (பஜனைப்பாடல்) மிருதங்கள் ஜால்ராவுடன் நடைபெறுகிறது. கோஷ்டி கானம் மெய்ம்மறந்த நிலையை உண்டுபண்ணுகிறது. இதனால் மனத்திலுள்ள மாசுகள் அகன்று விடுகின்றன. சுவாமி பிரபுபாதா அவர்களுடைய ஆக்ஞைப்படி சிஷ்யர்கள் பஜனைகளை உலகெங்கும் பரவும்படிச் செய்கிறார்கள். இதனால் பகவான் எல்லோருக்கும் பிரம் மானந்தம் என்ற அம்ருதத்தை அளிக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணனே பரப்பிரம்மம். அவரே பிரம்மானந்தம். அவருடைய நாமத்தைக் கானம் செய்யும்போது பக்தனுடைய நாவில் அவர் நடம் புரி கிறார். அவனுடைய மனத்தை தம்மிடம் ஈடுபடுத்துகிறார். இந்த மந்திரம் வேடிக்கைக்காகப் பாடும் சாமானியப் பாட்டல்ல. இது சாதகனைக் கடவுளுணர்வில் தூக்கி நிறுத்தும் நாதப்பிரம்மம் என்று வேதங்களாலும் மகரிஷிகளாலும் அனாதிகாலம் முதல் சொல்லப் பட்டிருக்கிறது. ''ஹே பிரபோ! உமது திருநாமத்திற்கு அளவு கடந்த சக்தியையும் மகிமையையும் அளித்திருக்கிறீர்கள்'' என்று சைதன்ய மகாப் பிரபு பகவானைத் துதித்துப் பாடுவார். சங்கீர்த்தனம் செய்யும் கோஷ்டிக்கு மாத்திரம் அல்லாமல் அதைக் கேட்கும் பக்தர்களுக்கும் கடவுளுணர்வு உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. பகவானது திருநாமம் நெருப்பைப் போன்றது. விஞ் ஞான ரீதியாக அதன் குணங்களைத் தெரிந்து கொண்டாலும் சரி, தெரிந்து கொள்ளாவிட்டாலும் சரி, அது தீண்டியவனைச் சுடும். உண்மையான பக்தியுடன் இந்த மகா மந்திரத்தைக் கானம் செய் பவர் சித்த சுத்தியடைவதுடன் ஆத்ம ஞானத்தையும் அடைவார். ஆகையால் பக்தர்கள் கொஞ்சமும் தயங்காமல் எங்கெங்கு எப்படி எப்படி முடியுமோ அவ்வாறு ஆங்காங்கே தகுந்த முறையில் ''ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே'' என்று நாம சங்கீர்த்தனம் செய்து நாதப் பிரம்மத்தை எழுப்ப வேண்டும்.

சங்கீர்த்தனம் முதலில் தெருக்களில் நடத்தப்படுகிறது. நியூ யார்க், லாஸ் ஏஞ்செல்ஸ், பாஸ்டன், ஸான ஃப்ரான்ஸிஸ்கோ, பர்க்லி, டெட்ராய்ட், ஃபிலடல்ஃபியா, வாஷிங்டன், டி.ஸி. ஹான லூலூ, லண்டன், ஹாம்பர்க், டோக்கியோ முதலிய நகரங் களின் தெருக்களில் முறையாக நடக்கின்றது. புதிய சங்கங்கள் நிறுவப்பட்டு ஆங்காங்கு இந்த நாமாவளி பஜனை நடந்துவருகிறது. ''ஹரே கிருஷ்ண மந்திரம் உலகத்தில் ஒவ்வொரு பட்டி தொட்டி யிலும் கேட்கப்படும்'' என்று சைதன்ய மகாப் பிரபு சொல்லியபடி இந்த இயக்கம் மேன்மேலும் விரிவடைந்து வருகிறது.

சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் விருந்து விழாக்களும் தெருவில் நடத்தும் நாமாவளி பஜனைகளும் பிரசித்த மானவை. ஒவ்வொரு சங்க நிலையத்திலும் இந்திய உணவு 10 அல்லது 15 பந்திகள் பரிமாறப்படுகின்றன. 5000 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ கிருஷ்ணன் பூமியில் அவதரித்து நிகழ்த்திய லீலைகளைக் கொண்டாடும் வகையில் அந்த விருந்துகளும் விழாக்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கூத்து, நாடகம், சங்கீர்த்தனம் (நாமாவளி பஜனை) முதலியவை அவற்றில் இடம் பெறும். பகவானுடைய

Koviloor Digital Library

பெருமைகளையும் குணங்களையும் அறியும் வண்ணம் விருந்தினர்கள் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். கிருஷ்ண பக்தி என்பது வறட்டுத் தத்துவமல்ல. சான்ஃபிரான்ஸிஸ்கோ வாசிகள் ஆண்டு தோறும் ஜகந்நாதருடைய பிம்பம் பெரிய ரதத்தில் ஏற்றிக் கடலுக்கு ஊர்வலமாக இழுத்துச் செல்லப்படுவதைப் பெரிதும் கொண்டாடி வருகிறார்கள். 1970-இல் நடைபெற்ற ரத யாத்திரை ஊர்வலத்தில் சுமார் 20,000 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டார்கள். கடற்கரையில் 8000 பவுண்டு பிரசாதம் வழங்கப் பட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் முழு அளவுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள்.

இந்த விழாக்களின் முக்கிய நோக்கம் பரமாத்மாவின் தன்மைகளை உணர்த்துவது. நாம சங்கீர்த்தனங்கள் வாயிலாகவும், உபந்நியாசங்கள் வாயிலாகவும் மக்களை இறைவன் கைங்கரியத்தில் ஈடுபடுத்துவது. பகவானை மறந்ததன் காரணமாகத்தான் நமக்கு இன்னல்கள் விளைகின்றன. Iskcon அதைப் புதுப்பித்து, பகவானை மக்களுக்கு நினைவூட்டிவருகிறது. கீதையில் சொல்லியிருக்கிறபடி இதுதான் மக்களுக்குச் செய்யும் மகத்தான சமூக சேவை; நிவாரணப் பணி. விருந்து, நடனம், பாட்டு, உபந்நியாசம் போன்ற இவ்வளவும் உன்னதமான முறையில், ஆனால் மிக எளிதாகக் கொண்டாடப்படுகின்றன.

சைத்தன்ய மகாப் பிரபுவின் நாட்களில் சூனியவாதிகள் இந்த ஆடல் பாடல்களைக் குறைகூறிக் குற்றம் சாட்டி வந்தார்கள். ஆனால் உண்மையில் வேத சாஸ்திரங்களான பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், வேதாந்த சூத்திரம், உபநிஷத்துக்கள், மகா பாரதம், ராமாயணம் முதலானவற்றைக் கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் இந்தக் கிருஷ்ண பக்தியை ஆதரித்தார்கள். இருபத்துநாலு மணி நேரமும் மூலத்தை முடிக்காமல் படித்துக் கொண்டேயிருக்கலாம். கிருஷ்ண பக்தி பற்றிய சாரம் அனைத்தும் அங்கே வெளிப்பட்டுவிடும். தெய்விக கைங்கரியத்தில் தோய்ந்து விட்டால் பக்தர்கள் இதயத்தில் ஞானம் தன்னைப் போல உண்டாகிறது. பகவத் சிந்தனைக்குரிய பக்தி யோக வகுப்புக்கள் இஸ்கான் நிலையங்களில் அன்றாடம் 2 வேளைகள் நடைபெறுகின்றன. பொதுமக்கள் எல்லோருமே கலந்து கொள்ள வருமாறு அழைக்கப்படுகிறார்கள். பிரம்ம சம்பிரதாய சிஷ்யவர்க்கப் பரம்பரை வழிவந்த அருள்திரு பிரபுபாத சுவாமிகள் அந்தக் கல்விமான்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர். அவரிடம் வேதாந்த தத்துவங்களுக்கும் தர்க்க ஞானத்துக்கும் குறைவில்லை. பல வேறு மதத் தத்துவங்களும், யோகப் பயிற்சி முறைகளும் இருந்தாலும், கிருஷ்ண பக்தி மாணவர்களும் போதகர்களும் பரமாத்மா பற்றிய ஞானத்தில் நிறைந்த நம்பிக்கை வாய்ந்தவர்கள். 'இறைவனே உயர்ந்தவன்' என்று அவர்கள் கேட்டிருப்பதுடன் மட்டுமல்ல, வேத சாஸ்திரங்களில் தோய்ந்த ஆன்மிக குருவின் வாய்வழியாகவும் பகவான் எத்தனை பெரியவர் என்றும் அவருடைய அருட் பிரவாகம் எவ்வாறு செயல்பட்டு விளங்குகிறது என்றும் அதை அவர் எவ்வாறு அனுபவித்து வருகிறார் என்றும் கேட்டு வருகிறார்கள். கிருஷ்ண பக்தி பற்றிய வேதாந்த இலக்கியங்களைப் போல திட்டவட்டமாக, தெளிவாக வேறு எந்த மார்க்கத்திலும் இத்தனை நூல்கள் வால்யூம்களாக இயற்றப்படவில்லை. ஆண்டவனுக்குப்

Koviloor Digital Library

மகாவிஷ்ணு — எல்லாப் பிரபஞ்சங்களையும் படைத்தவர்

Koviloor Digital Library

புரியும் கைங்கரியத்தில் இருக்கும் நிடச் சித்தம், நம்பிக்கை இவற்றுக்கெல்லாம் காரணம் பகவானுடைய பிரத்திட்ச அருளே யாகும். நாம சங்கீர்த்தனம் செய்வதாலும் பகவத் குணங்களைக் கேட்பதாலும் மட்டுமே பரமாத்மாவின் பெருமையோடு தொடர்பு கொண்டுவிட முடிகிறது. அதை எவனுமே உணரலாம். புலன்கள், மனம், பேச்சு, சக்தி முதலிய எல்லாவற்றையும் ஈடுபடுத்தி, பக்தர்கள் ஆன்மிக உலகத்துச் செய்திகளை இடையறாது பெறுகிறார்கள். கிருஷ்ணனே அத்தகைய பக்தர்களை யோகி, ஞானிகளுக்கெல்லாம் மேலானவன் என்று விளக்கியிருக்கிறான். பகவானுடைய அருட் பிரபாவத்தையும் அவனுடைய அருள் மார்க்கத்தையும் இந்த இயக்கத்தவர்கள் அறிந்தவர்களாக இருப்பதில் வியப்பு ஒன்று மில்லை.

இஸ்கான் இந்த உயர்ந்த சாஸ்திர ஞானத்தைப் போதிக்க வழி செய்திருக்கிறது. இந்த ஞானத்தையே ஞானத்துக்கெல்லாம் சிகரமாக கீதை கூறுகிறது. வேதப்படி ஆன்மிக ஞானம் இல்லாத கல்வி எதற்கும் பயனற்றது. மனிதன் முதலில் தன்னை அறிந்து கொள்ள உதவும் கல்வியே சிறந்தது; அதுவே இறைவனை அறியும் ஞானம். கற்றபடி நிற்பதற்குத்தான் படிப்பு. ஆன்மிகக் கட்டுப் பாட்டுடன் மாறுதலின்றி ஒழுக வேண்டியதற்கே கல்வி. கிருஷ்ண பக்தியைப் பரப்புகிறவர்கள் மிகுதியாகத் தேவைப்படுகிறார்கள். அது முழு நேரப் பணியாகும். இங்கே நடைபெறும் வகுப்புக்கள், மாணவர்களை நாளடைவில் போதகர்களாக்கஉதவுகின்றன. படித்த பின்னர், ஓராண்டு ஓர் ஆலயத்தில் பணி புரிய வேண்டும். பிறகு அந்த மாணவருக்குப் 'பக்தி—சாஸ்திரி' என்ற விருதும் வழங்கப் படலாம். அதன் பின்னர்தான் ஒருவர் போதகராக நியமிக்கப் படுவார். அதற்கு மேலும் உண்டான பொறுப்புகள், மேலான பணிகள் எல்லாம் அவருக்கு இருக்கும்.

கிருஷ்ண பக்தி இயக்கத் தத்துவம் குறுகிய ஜாதி மத பேதமற்றதாதலின் ஹிந்துவோ கிறிஸ்தவரோ யாராயிருந்தாலும் தங்கள் கடவுள் நம்பிக்கையைச் சங்கீர்த்தனங்கள் மூலமாகவும் பகவத் கீதையைக் கேட்பதன் மூலமாகவும் வளர்த்துக் கொள்ளலாம். ஞானம் பெறாமல், தன்னை உணராமல், ஆண்டவனுக்கு உவப்பான தொண்டுகளைச் செய்யாமல் எந்த மதமும் இருக்க முடியாது. இந்தப் பூமண்டலத்தில் வாழும் ஜீவ ராசிகள் இந்த இயக்கத்தின் சங்கீர்த்தனங்களைக் கேட்டு இன்ப முற்று உய்யுமாக. ஹரே கிருஷ்ண என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் ஒலிக்கும்படி செய்வதே தங்கள் கடமையாக ஒவ்வொருவரும் கருதுவார்களாக! இந்த ஒரே வழி யால்தான் உலகில் உண்மையான சாந்தி பரந்து நிலவும். மனித வர்க்கம் பகவானது அருள் உலகை அடையத் தகுதியும் பெறும்.

Koviloor Digital Library



அடையாளமான நகரப் பெருவீதி முடிவிலே நம்மைக் குழப்பத்திலே கொண்டு விட்டுவிடும். ஆனால் கிருஷ்ண சிந்தனையோ உறுதியாக நம்மை ஆனந்தத்திலேயே கொண்டு சேர்க்கிறது.

Koviloor Digital Library

சுகத்துக்கு ஒரு வழி

—அருள்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா—

நாம் ஒவ்வொருவரும் சுகம் எங்கே என்று தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையான சுகம் எது என்று நமக்குத் தெரியாது. சுகத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேச்சு அடிபடுகிறது. ஆனால் உண்மையில் பார்த்தால் சுகமாய் இருப்பவர்கள் யாரையுமே காணோம். காரணம் உண்மையான சுகம் அல்லது மகிழ்ச்சியின் இருப்பிடம் தாற்காலிகமான பொருள்களில் இல்லை என்பதை யாருமே அறிந்திருக்கவில்லை. உண்மையான சுகத்தைப் பற்றிப் பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குப் பகவத் கீதையில் விளக்கியிருக்கிறார்.

சுகம் என்ற அனுபவத்தைப் புலன்களாலேயே உணருகிறோம். கல்லுக்குப் புலன்கள் இல்லை. அது சுகமோ, துக்கமோ படுவதில்லை. வளர்ச்சி பெறாத உணர்வைக் காட்டிலும் வளர்ச்சியடைந்துள்ள உணர்வே சுக துக்கங்களைத் திவிரமாக அறிகிறது; அநுபவிக்கிறது. மரங்களுக்கும் பிரக்ஞை உண்டு. ஆனால் அது வளர்ச்சியற்ற பிரக்ஞை. மரங்கள் நெடுநாள் எல்லாவித பருவகாலங்களையும் தாங்கி நிற்கக் கூடியவை. ஆனால் துன்பங்களை உணரக்கூடிய சக்தி அவற்றிற்கு இல்லை. ஒரு மனிதனை அவ்வாறு மரத்தைப் போன்று ஒரு மூன்று நாள் அல்லது இன்னமும் குறைந்த காலத்துக்கு நிற்கச் சொன்னால் அவனால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆகவே ஒவ்வொரு ஜீவராசியும் அதனதன் பிரக்ஞைக்கு ஏற்றவாறு சுகம் அல்லது துக்கத்தை அனுபவிக்கின்றன என்று ஆகிறது.

இந்த உலகில் நாம் அனுபவிக்கும் சுகங்கள் யாவும் உண்மையான சுகம் இல்லை. மரத்தைப் பார்த்து, ''நீ சுகமாக இருக்கிறாயா?'' என்று ஒருவன் கேட்டால் அதற்கு வாயிருந்தால், ''ஆமாம்; சுகமாகவே வருஷமெல்லாம் நின்று கொண்டிருக்கிறேன். காற்றையும், பனியையும் வெகு சுகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறக் கூடும். மரங்களுக்கு அவை ஆனந்தம் தரக் கூடியவை. ஆனால் மனிதனால் அப்படி அவற்றை அனுபவிக்க முடியாது. அவனுடைய மதிப்பில் அது மிகவும் மோசமான அனுபவம். உயிர் வாழ் இனங்களிலே பல வகைகளும் தரங்களும் இருக்கின்றன. அவற்றின் தன்மைகளும் உணர்வுகளும் அவ்வாறே பலவிதமாக, பலபடியாக வேறுபட்டுக் காண்கின்றன. ஒரு மிருகம் மற்றொரு மிருகம் கொல்லப்படுவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாலும் அது புல்லை மேய்ந்து கொண்டிருக்கும். அதற்கு அடுத்தபடியாக தனக்கும் அந்தக் கதி வரலாம் என்று புரிந்து கொள்கிற அறிவு அதற்கு இல்லை. அது என்னவோ தான் சுகமாக இருப்பதாக நினைக்கிறது. அடுத்த கணமே அதுவும் வெட்டிக் கொல்லப்படலாம்.

சுகம் என்பது இப்படிப் பலவாறாக வேறுபட்டிருக்கிறது. ஆயினும் எல்லாவற்றையும்விட மேலான சுகம் எது? ஸ்ரீ கிருஷ்ணன் இதை அர்ச்சுனனுக்குச் சொல்கிறார்:

> ''சுகம் ஆத்யந்திகம் யத் தத், புத்தி கிராஹ்யம் அதிந்திரியம்,
> வேத்தி யாத்ரா ந சைவாயம் ஸ்திதஸ்
> சலதி தத்வத:'' (கீதை 6.21).

Koviloor Digital Library

சமாதி நிலையில் அனைத்துக்கும் மேலான கங்குகரையற்ற ஆனந்தம் பெருகி வழிகிறது. அப்போது அவன் ஆனந்த மயமாகவே ஆகிவிடுகிறான். இத்தகைய அனுபவத்தைப் பெற்றவன் உண்மையினின்றும் பிறழ்வதில்லை.

புத்தி என்பது அறிவு; சுகத்தை அனுபவிக்க விரும்புகிறவன் அறிவு வாய்ந்தவனாக இருக்க வேண்டும். பிராணிகளுக்கு அத்தகைய அறிவு வளர்ச்சி இல்லையாதலால் மனிதனைப் போல் அவற்றினால் வாழ்க்கை நலங்களை அனுபவிக்க முடிகிறதில்லை. கைகள், மூக்கு, கண்கள், புலன்களை உணருகிற அவயவங்கள் போன்ற எல்லா உடலுறுப்புக்களும் இறந்த ஒரு மனிதனிடமும் இருக்கின்றன. ஆனாலும் அவனால் ஒன்றையும் அனுபவிக்க முடிவதில்லை. ஏன்? அந்த உடலிலிருந்து அனுபவத்தை உணரும் சக்தி, தெய்விகமான உயிர்ப் பொறி போய்விட்டது. ஆகவே அந்த உடலுக்கு ஒரு சக்தியுமில்லை. ஒருவன் இதற்கும் மேலே சிறிது அறிவைப் பயன்படுத்தி யோசித்துப் பார்த்தால் இந்த உடல் எதையும் உண்மையில் அனுபவிப்பதில்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். உள்ளேயிருக்கும் அந்தத் தெய்வீகப் பொறிதான் உண்மையில் அனுபவிக்கிறது. ஒருவன் உடலிலுள்ள இந்தப் புலன்கள்தான் சுகங்களை அனுபவிக்கின்றன என்று எண்ணிக் கொண்டாலும் உண்மையில் அனுபவிப்பது அந்தத் தெய்விகப் பொறியே. அந்தப் பொறிக்குத்தான் எதையும் அனுபவிக்கிற ஆற்றல் இருக்கிறது. ஆனால் அது உடலுறுப்புக்களின் இயல்பு காரணமாக வெளித் தெரிவதில்லை. அதனால் நமக்கும் இந்த உணர்வு தென்படுவதில்லை. அழகான பெண்ணொருத்தியின் உயிரற்ற சடலத்தை ஒருவனுக்கு வழங்கினால் அவன் அதை ஏற்பானா? மாட்டான். உயிர்ப்பொறி அந்த உடலைவிட்டுச் சென்றுவிட்டது. அந்தப் பொறி உடலுக்குள்ளிருந்த இத்தனையையும் அனுபவித்துக் கொண்டிருந்ததுடன் உடலையும் நிர்வகித்து வந்திருக்கிறது. அந்தப் பொறி —ஜீவன் அகன்றபின் உடல் தன்னால் உருக்குலைந்து அழிந்து போகிறது.

அந்தப் பொறிதான் எல்லாவற்றையும் அனுபவித்து வருகிறது என்றால் அதற்கு உணர்ச்சியும் இருக்க வேண்டுமே. இல்லாவிட்டால் அது எப்படி அனுபவிக்க முடியும்? ஜீவாத்மா அணுப் பிரமாணமாக இருந்தாலும் அதுவே உண்மையில் அனுபவிக்கும் கருவியாக இருப்பதாக வேதங்கள் உறுதிப்படுத்துகின்றன. அந்த ஆத்மாவை அளப்பது சாத்தியமல்ல. ஆனால் அதற்கு அளவே கிடையாது என்றும் சொல்லிவிட முடியாது. ஒரு பொருளுக்கு அகல நீளம் இல்லாததுபோல் தோன்றலாம். ஆனால் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கும்போது அகலம் நீளமெல்லாம் இருப்பது தெரியும். அதே போன்று ஆத்மாவுக்கும் ஒரு பரிமாணம் உண்டு. ஆனால் நாம் உணர முடிவதில்லை. நாம் ஒரு சூட்டு வாங்கினால் உடம்புக்குப் பொருந்தக் கூடியதாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஜீவாத்மாவாகிய பொறிக்கும் ஒரு வடிவம் இருந்தாக வேண்டும். இல்லாவிடில் அது தங்கியிருக்கும்படி இந்த ஊனுடல் எவ்வாறு வளர்ந்தது? அந்தத் தெய்விகப் பொறி உடலில்லாத வேறு ஒன்றல்ல. அதுதான் உண்மையான பிரகிருதி. கடவுள் உண்மையான ஒரு பிரகிருதி; ஜீவாத்மா என்பது அந்தப் பிரகிருதியில் ஒரு சிறு அம்சம்; எனவே ஜீவாத்மாவும் ஒரு பிரகிருதிதான். தந்தைக்கு ஒரு வடிவமும் தனித் தன்மையும் இருந்தால் மகனுக்கும் அவை இருக்கின்றன. மகனுக்கு அவை இருக்கின்றன

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
Acc.No: 2356
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

என்பதால் தந்தைக்கும் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளலாம். எனவே ஆண்டவனின் மைந்தர்களாகிய நாம் நம்முடைய வடிவமும் தனித்தன்மையும் போல நமது தந்தையாகிய ஆண்டவனுக்கு இல்லை என்று எவ்வாறு மறுக்க முடியும்?

அதிந்திரியம் என்றால் உண்மையான சுகத்தை அறிய இந்த ஊன் உணர்வுகளை மேம்பட்ட நிலைக்கு உயர்த்தியாக வேண்டும் என்பதாகும். 'ரமன்தே யோகினோ நன்தே சத்யானந்த சிதாத்மனி'' தெய்விகமான வாழ்வை நாடும் யோகிகளும் தம்முன்னேயுள்ள பரமாத்மாவின் மீது உணர்வுகளைத் திருப்பி இந்தச் சுகத்தை அனுபவிக்கிறார்கள். இன்பம் இல்லை என்றால் அதை அனுபவிப்பது என்பதும் கிடையாது. அப்படியானால் புலன்களை அடக்குகிற பிரயாசையெல்லாம் வீணே எதற்காக? இவ்வளவு கஷ்டப்பட்டுப் புலன்களை அடக்கி என்ன இன்பத்தைக் காண்கிறார்கள்? அந்த இன்பம் அனந்தமானது; முடிவில்லாதது. இது எப்படி? ஜீவாத்மா அழிவற்றது; பரமாத்மாவும் அழிவற்றவன். ஆகவே அவர்களுடைய பரஸ்பர ஐக்கிய பாவமும் அழிவற்றதேயாகும். ஒருவன் மெய்யாகவே புத்திசாலியாக இருந்தால் அழியக்கூடிய இந்த உடல் இன்பங்களை நீக்கிவிட்டு அவனுடைய அனுபவங்களையெல்லாம் தெய்விக வாழ்க்கையில் பொருத்திக் கொள்வான். தெய்விக வாழ்க்கையில் பரமாத்மாவுடன் கலக்கப் பார்க்கிற சங்கமமே ராஸ லீலை எனப்படும்.

பிருந்தாவனத்தில் கிருஷ்ணன் கோபிகைகளோடு நடத்திய ராஸ லீலைகளைப் பற்றி நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அது இரண்டு ஊன் உடல்கள் பரிமாறிக் கொள்கிற சாதாரணமான இன்ப நிகழ்ச்சியல்ல. அது தெய்விக சரீரங்களின் மூலமாகப் பரிமாறிக் கொள்ளப்படும் உணர்ச்சிகளாகும் என்றே கூற வேண்டும். இதைப் புரிந்துகொள்ள அறிவுத் திறன் வேண்டும். உண்மையான சுகம் என்ன என்பதைச் சிறிதும் அறியாத பேதை உலகாயத இன்பங்களில் அந்தச் சுகத்தைக் காண விரும்புவான். இந்தியாவில் ஒரு கதை உண்டு. கரும்பு என்றால் தெரியாத ஒருவன் அது மென்றால் இனிப்பாக இருக்கும் என்று மட்டும் கேள்விப்பட்டான். உடனே அந்த முட்டாள் எல்லா மூங்கில் கழிகளையும் மென்று பார்க்கத் தொடங்கிவிட்டானும். அப்படியானால் கரும்பின் ருசியைப் பற்றி அவனுக்கு எங்கே தெரியப் போகிறது? அதே போல நாம் சுகத்தையும் இன்பத்தையும் அடைய முயன்று வருகிறோம். ஆனால் அவற்றை இந்த ஊனுடலிலிருந்து சுவைத்துப் பெற நினைக்கிறோம். அதில் நமக்கு சுகமோ, இன்பமோ கிடைப்பதில்லை. அவை நிரந்தரமானவையும் அல்ல.

விண்ணிலே தோன்றும் ஒரு வெளிச்சத்தை நாம் மின்னல் என்று மதிப்பதுபோல்தான் அந்த அனுபவம். உண்மையான சுகம் எது என்பதை அறியாதவனே அதனின்று மாறிச் செல்கிறான்.

உண்மையான சுகத்தைப் பெறுவதற்கு ஒரு வழிமுறையாக இருப்பது கிருஷ்ண பக்தி என்ற முறைதான். கிருஷ்ண உணர்வு மெல்ல மெல்ல நம்முடைய அறிவைத் தீட்சிண்ணியப்படுத்தி, தெய்விக இன்பத்தை நுகரும் ஆற்றலை நமக்கு ஊட்டுகிறது. தெய்விக இன்பத்தைப் பெறுவதற்கு இணையாக உலகாயத இன்பங்களைச் சிறுகச் சிறுகக் கைவிட்டு விடுவோம். பரிபூரணமான சத்

Koviloor Digital Library

தியத்தை உணரும் வழியில் நாம் பெறும் முன்னேற்றம் போலி யான சுகங்களிலிருந்து நம்மை விடுவித்து விடுகிறது. எப்படியோ ஒருவன் அந்தக் கிருஷ்ண உணர்வு பெறுகிற நிலைக்கு உயரும்போது என்ன பயன் உண்டாகிறது என்று பார்ப்போம்.

''யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே
நாதிகம் தத : யஸ்மின் ஸ்திதோ ந துஃகேன
குருணாபி விசால்யதே.'' (கீதை 6.22)

இந்த உணர்வு கிடைக்கப் பெறுகிறபோது இதைக் காட் டிலும் மேலான நன்மை எதுவுமில்லை என்பதை அவன் அறிந்து கொள்கிறான். அந்த நிலையில் அவன் உறுதியாக இருக்கிறான். என்ன பெரிய துன்பம் வந்துற்ற போதிலும் சஞ்சலமற்று அவன் அசையாமல் அதன் நடுவே நிற்கிறான்.

ஒருவன் கிருஷ்ண உணர்வு முற்றும் பெற்றுவிட்டால் பிற சாதனைகள் எல்லாம் அவனுக்கு அற்பமானதாகி விடுகின்றன. இந்த உலகில் நாம் பலவற்றைச் சாதிக்க முயல்கிறோம். பணம், பெண்கள், புகழ், அழகு, அறிவு முதலியனவற்றைப் பெற எண்ணு கிறோம். ஆனால் இந்தக் கிருஷ்ண உணர்வு ஏற்பட்டவுடனேயே நமக்குத் தோன்றுவது இதுதான் : ''எந்தச் சாதனையும் இந்தக் கிருஷ்ணப் பிரக்ஞையைக் காட்டிலும் சிறந்ததன்று.''

கிருஷ்ண பிரக்ஞையின் சுவையைத் துளி சுவைத்துவிட் டாலே பெரிய ஆபத்துக்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் நமக்கு வந்துவிடுகிறது. மற்ற இன்பங்களோ அனுபவங்களோ ருசியற்ற வெற்றுச் சக்கைகளாகத் தோன்றிவிடுகின்றன. அந்தப் பிரக்ஞை யில் நிலைத்து நிற்பவனை எத்தகைய பெரிய ஆபத்தும் அசைக்க முடிவதில்லை. இந்த உலகிலும் சரி, உலக வாழ்விலும் சரி, ஆபத் துக்களுக்குப் பஞ்சமே இல்லை. அவற்றைப் பார்க்க விரும்பாமல் நாம் கண்களை மூடிக்கொண்டு விடுகிறோம். எப்படியாவது அவற் றைச் சரிப் படுத்திக்கொண்டு போக விரும்புகிறோம். அந்த அறியா மையிலிருந்து மீண்டு, நம்மைச் சூழ வரும் பற்பல ஆபத்து விபத் துக்களிலிருந்து காக்கக் கூடிய கிருஷ்ண பக்திப் பயிற்சியைப் பெற்றால் நாம் எங்கிருந்து தோன்றினோமோ அந்த ஆண்ட வனுடைய பாதாரவிந்தத்தைச் சார்ந்துவிடலாம். வேறு எதைப் பற்றியும் நாம் கவலைப்பட மாட்டோம். ''ஆபத்துக்கள் வரும், போகும். வந்தால் வரட்டுமே'' என்ற மனநிலை உண்டாகிவிடும்.

இத்தகைய மாற்றத்தை இந்த உலகாயத மேடையிலிருந்த படி இந்த ஸ்தூல சரீரமே நாம் என்று மயங்கியிருக்கும் வரையில் பெற முடியாது. இங்கே எல்லாம் அழுகி வீணாகப் போகக் கூடியவை. கிருஷ்ண பக்தி முதிர முதிர இத்தகைய சரீர அவதி களிலிருந்தும் பந்தங்களிலிருந்தும் மனிதனுக்கு விடுதலை கிடைத்து விடுகிறது.

சம்சாரம் ஒரு பெருங்கடல் என்று ஒப்பிடுகிறது ஸ்ரீமத் பாக வதம். நாம் காணும் இந்தப் பிரபஞ்ச வெளியில் லட்சோப லட்சம் கிரகங்கள் மிதக்கின்றன. அப்படியானால் நம் அட்லாண்டிக் சமுத் திரத்தைப் போல அல்லது பசிபிக்கைப் போல எத்தனை சமுத்

Koviloor Digital Library

திரங்கள் அங்கே இருக்கும் என்று கற்பனே செய்து பார்க்கலாம். உண்மையில் மொத்தப் பிரபஞ்சமே பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் துன்பமயமான பெருங்கடலினுள்ளேதான் ஆழ்ந்து கிடக்கிறது. இந்தத் துன்பப் பெருங்கடலேத் தாண்ட ஓர் உறுதி மிக்க படகு வேண்டும். அந்தப் படகுதான் ஸ்ரீ கிருஷ்ணனின் பாத கமலம். அந்தப் படகில் நாம் ஏறிக்கொண்டுவிட வேண்டும். அது சிறியதாக இருக்குமோ என்று தயங்கக் கூடாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே தாங்குவது அந்தப் பாதம்தான். அவன் பாதங்களைத் தஞ்சமடைந்து விட்டால் இந்தப் பிரபஞ்சமே ஒரு சிறு குட்டையாகத் தோன்றும்; அதாவது ஒரு கன்றுக்குட்டியின் குளம்படி அளவுக்கு. இதைக் கடப்பது ஒன்றும் பெரிய கஷ்டமேயில்லை.

''தம் வித்யாத் துக்க சம்யோக வியோகம் யோக சம்க்ஞிதம்'
ஸ நிச்சயேன யோக்தவ்யே யோகோ நிர்விண்ண சேதஸா''
(கீதை 6.23)

உலக சம்பந்தத்தின் காரணமாக உண்டாகிற துன்பங்கள் அனைத்திலிருந்தும் கிடைப்பதுவே உண்மையான விடுதலையாகும்.

புலனடக்கம் இல்லாததால் இந்த உலகில் துன்பம் உண்டாகிறது. அத்தகைய துன்பங்களில் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். புலனடக்கம் வந்துவிட்டால் தெய்விகப் பேரானந்தமும் வாழ்வும் அடையலாம்.

''ஸங்கல்ப பிரபவான் காமாம் த்யக்த்வா ஸர்வா
னஸே ஷத: மனஸைவேந்திரிய க்ராமம் விநியம்ய ஸமந்தத :''
'' சனைச் சனேர் உபரமேத் புத்யா த்ருதி க்ரிஹீதயா
ஆத்ம சம்ஸ்தம் மன :
க்ருத்வா ந கிஞ்சித் அபி சிந்தயேத்.
'' யதோ யதோ '';
நிச்சரதி மனஸ் சஞ்சலமஸ்திரம், ததஸ் ததோ
நியம்யைதத் ஆத்மனி ஏவ வசம் நயேத்.''

(கீதை 6.24, 25, 26)

உறுதி பிறழாத திட நம்பிக்கை வைத்து ஒருவன் யோக சாதனே செய்துவர வேண்டும். உலகத்து ஆசைகள், தான் என்ற போலி அகம்பாவம் எல்லாவற்றையும் துறந்துவிட்டால் மனம் அடங்கி, பல முனைகளிலும் புலனடக்கம் வந்துவிடும். இப்படியே போய் மெல்ல மெல்ல ஞானபூர்வமான சமாதி நிலையை எட்டிவிடலாம். மனம் ஒரு நிலைப்பட்டுத் தன்னே அறிந்து கொள்வது ஒன்றே நினைவாக ஆழ்ந்து விடுகிறான். வேறு எதுவும் நினைப்பதில்லை. எங்கெங்கெல்லாமோ அலேபாய்ந்து கொண்டிருந்த மனத்தைக் கட்டுப்படுத்தி அடக்கித் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனம் எப்பொழுதும் சஞ்சலப்படும் தன்மையுடையது. எப்பொழுதும் அலேபாய்ந்தபடிதான் இருக்கும். யோக சாதனே மூலமாகத்தான் நாம் கிருஷ்ண பிரக்ஞைக்கு மனசை இழுக்கிறோம். கிருஷ்ண பிரக்ஞையை விட்டு மனம் ஓடப் பார்க்கிறது.

Koviloor Digital Library

காரணம் பல பிறவிகளாக உண்டான வாசனை. அதனால் தொடக்கத்தில் கிருஷ்ண பக்தியில் மனத்தை ஒரு நிலைப்படச் செய்வது சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் காலக்கிரமத்தில் இதைச் சரியாக்கி விடலாம்.

கிருஷ்ண நினைவில் நிற்காமல் ஒன்றிலிருந்து நினைவு வேறு ஒன்றுக்குத் தாவிக் கொண்டேயிருப்பதற்குக் காரணம் மனம் சஞ்சலமுற்றிருப்பதுதான். உதாரணமாக நாம் ஏதோ ஒரு வேலையைச் செய்து கொண்டிருப்போம். ஆனால் நம் நினைவோ ஒரு காரணமும் இல்லாமல் பல ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை எண்ணிக் கொண்டிருக்கும். நம் அடிமனத்திலிருந்து இந்த எண்ணங்கள் வருகின்றன. இது எப்போதும் மேல் நோக்கி வரப் பார்ப்பதால் மனம் அலைபாய்கிறது. குட்டையைக் கலக்கினால் சேறு கலங்கலாக வருவதில்லையா? அதைப் போலத்தான். யோக சாதனை இந்த நினைவுகளை அடக்கி, மனத்தைச் சாந்தப்படுத்த உதவுகிறது.

இதனாலே யோக சாதனைக்குப் பல கட்டுத் திட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை நாம் கடைப்பிடித்தால் மனம் நம் விருப்பப்படி அடங்கும். மனத்தை அடக்கும் பயிற்சிக்குச் சில தள்ளுபடிகள் உண்டு; அனுசரிக்க வேண்டியவை சிலது உண்டு. அவற்றை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். இஷ்டப்படி நாம் இருக்க நினைத்தால் மனத்தை அடக்க முயல்வது எப்படி? மனம் பழகிவிட்டால் அது கிருஷ்ண ஸ்மரணையாகவே இருக்கும். வேறு எதையும் நினையாது. சாந்தமும் இன்பமும் மனத்தில் தவழும்.

''பிரஸாந்த மனஸம் ஹி ஏனம் யோகினம் சுகம் உத்தமம்,
உபைதி ஸாந்த-ரஜஸம் ப்ரம்மபூதம் அகல்மஷம்.''

(கீதை 6.27)

என் நினைவில் மனத்தை நிறுத்தியுள்ள யோகி மிக மேலான – பேரானந்தத்தை அடைகிறான். பிரம்மத்தோடு ஐக்கியமாகி விடுவதால் அவன் விடுதலை பெற்றவனாகத் திகழ்கிறான். அவன் மனம் சாந்தமாக இருக்கிறது. அவனுடைய ஆசைகள் அடங்கி விடுகின்றன. அவன் பாபத்திலிருந்து விடுபட்டுப் போகிறான்.

சுகத்தை நாடி மனசு கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறது. ''இது எனக்குச் சுகத்தைத் தரும்'' என்று நான் சதா நினைக்கிறேன். ''அது சுகத்தைக் கொடுக்கும். இதில்தான் சுகம். சுகம் அதோ அதில் இருக்கிறது'' என்று இப்படியே நம் மனசு நம்மை அங்கும் இங்கும் இழுத்துக் கொண்டிருக்கிறது. கடிவாளமில்லாத குதிரை பூட்டிய ரதத்தில் சவாரி செய்வது போல நாம் வேறு வழியில்லாமல் எப்போதும் பயந்து நடுங்கியவாறு அதில் சவாரி செய்து கொண்டிருப்பதுபோல இருக்கிறோம். மனத்துக்கு ஒரு லகான் போடுவது போல கிருஷ்ண பிரக்ஞை என்ற கடிவாளம். இந்தப் பிரக்ஞை வரத்தான் நாம ஸ்மரணம் : ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண, ஹரே, ஹரே— ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே!

Koviloor Digital Library

முரட்டுக் குதிரையாக இருந்த மனம் நம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி விடுகிறது. நாம் எந்த நேரமும் கிருஷ்ண சேவையிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் மனம் நம்மைக் கண்ட படி இழுத்துச் செல்ல நேரம் கொடாமல் அதற்கு வேலை கொடுக்க முடியும். வீணான ஆசைகளிலும் நிலையற்ற இன்பங்களிலும் செல்ல விரும்பும் மனத்தை இழுத்து நிறுத்தி வைக்கத்தான் கிருஷ்ண சேவை.

''யுஞ்சண்யேவம் சதாத்மானம் யோகி
விகத கல்மஷ: —சுகேன பிரம்ம சம்ஸ்பர்சம்
அத்யந்தம் சுகம் அச்னுதே.'' (கீதை 6.28)

தன்னிலே நிலைத்த, உலக வாசனைகளிலிருந்து விடுபட்ட யோகி மிக உன்னதமான ஆனந்த நிலையைப் பெறுகிறான். மிக மேலான பரப்பிரம்மத்தைத் தொட்டு விடுகிறான்.

தன்னிடம் பக்தி கொண்டவர்களுக்குக் கிருஷ்ணன் பாது காப்பாக நிற்கிறான். ஒருவனுக்குக் கஷ்டம் நேர்ந்தால் காப் பாளனாக அவன் ஓடிவந்து காக்கிறான். கீதையில் விளக்கியுள்ளபடி உயிர்வாழும் ஒவ்வொரு ஜீவராசிக்கும் கிருஷ்ணனே உயிர்த் தோழனாக இருக்கிறான். எனவே நாம் அவன் நட்பைப் புதுப்பித் துக் கொள்ள வேண்டும். கிருஷ்ண பிரக்ஞை அல்லது உணர்வு அதைத்தான் செய்கிறது. கிருஷ்ண உணர்வைப் பயின்று சாதகம் செய்து வந்தால் நித்திய வாழ்வில் எதிர்ப்படும் ஆசாபாசங்கள் நம்மை அணுகுவதில்லை. நம்முள்ளேயே வசிக்கும் கிருஷ்ணன் நாம் அவன் பக்கம் திரும்புவதற்காகக் காத்துக் கொண்டேயிருக் கிறான். ஆனால் நாமோ நிலையில்லாத உலகத்து ஆசைகளில் உழன்று அவனை மறந்து போய் இருக்கிறோம். இந்த அற்ப ஆசை கள் அறுந்து தொலைய வேண்டும். நாம் தூய ஜீவனாகவே இருந்து பிரம்ம ஸ்வரூபமாகவே மாறிவிட வேண்டும்.

Koviloor Digital Library

பக்தி ரஸாமிருத ஸிந்து

—அருள்திரு ஏ. ஸி. பக்திவேதாந்த பிரபுபாத சுவாமிகள்—

எவன் ஒருவனுலும் மற்றொருவரை நேசிக்காமல் வாழ முடியாது. உயிர் வாழும் ஜீவன்களிடத்தில் இத்தகைய இயற்கைக் குணம் இருந்து வருகிறது. புலி போன்ற வனவிலங்குகளிடத்தும் இந்த அன்பு காணப்படும்போது மனிதனிடத்தில் இது நிச்சயமாய் இருக்கிறது. காற்ருே ஒளிக்கதிரோ அசைவினுல் விரிவடைவதுபோல நமது அன்பும் விரிந்து போகும் தன்மை பெற்றிருக்கிறது. இதற்கு முடிவு எது என்று நமக்கே தெரியாது. மனித சமூகம் தன் நாட்டை நேசிக்கக் கற்பிக்கிறது; தன் குடும்பத்தையோ அல்லது தன்னையோ நேசிக்க ஒருவனுக்குப் போதிக்கிறது. ஆனுல் ஒவ்வொரு வரையும் மகிழ்ச்சி கொள்ள வைக்கும் அன்பாகிய இந்த இயற்கைக் குணத்தை எங்கிருந்து பெறுவது என்று யாருக்கும் தெரிவதில்லை. தெரியாமல் இருக்கும் இடம்தான் கிருஷ்ணன். அருள்திரு ஏ. ஸி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்களது அருள் மொழிகள் கிருஷ்ண ப்ரேமை எனும் இந்த அன்பின் இலக்கணத்தை உயிர் வாழும் ஒவ்வொருவரும் முற்றிலும் எளிய வகையில் அறியும் வண்ணம் போதிக்கின்றன. கிருஷ்ணனை நாம் நேசித்துணரக் கற் றறிந்து விட்டோமானுல் அந்தக் கணமே நாம் உயிர் வாழும் ஒவ்வொரு ஜீவனையும் எளிதாக நேசிக்க முடியும்.

ஸ்ரீ ஸ்ரீசிக்ஷாஷ்டகம்

பகவான் சைதன்ய மகாப் பிரபு இயற்றிய எட்டு சுலோகங் கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த வையகத்தில் ஐந்நூறு ஆண்டு களுக்கு முன்னே தோன்றிய ஸ்ரீ சைதன்ய மகாப் பிரபு ஹரே கிருஷ்ண நாம ஸ்மரணம் ஒன்றே இந்த யுகத்தில் பகவானை உணர்ந்து கொள்வதற்குச் சிறந்த வழி என்று வேத சாஸ்திர ஆதாரங்களுடன் வலியுறுத்தி வந்தார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத் மாவே தூயபக்தர் உருக்கொண்டு சைதன்ய மகாப் பிரபுவாக அவதரித்திருக்கிருர் என்ற உண்மை வேத நூல்களிலிருந்தே புலப்படுகிறது. நாம ஸ்மரணம் செய்து பரமாத்மாவை வழிபடுகிற சங்கீர்த்தன இயக்கத்தின் சாரமாகவே அவருடைய சுலோகங்கள் அமைந்துள்ளன. சைதன்ய மகாப் பிரபுவின் நேர் சிஷ்ய பரப்பரை யில் வந்துள்ள அருள்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்களின் பக்த கோடிகள் அந்த வழியையே பின்பற்றி வருகின் றனர்.

ஸ்ரீ கிருஷ்ண சங்கீர்த்தனமே பெருமை வாய்ந்தது. அது பல் லாண்டுக் காலமாகத் திரண்டு கிடக்கும் மாசுகளையெல்லாம் போக்கி மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது. திரும்பத் திரும்பப் பிறப் பதும் இறப்பதுமாக இருந்துவரும் வினைத் தீயை அது அணைத்து விடுகிறது. அந்தச் சங்கீர்த்தனமே மனித குலத்தை வாழ்த்தும் சாதனமாகும். ஏனெனில் வாழ்த்தெனும் நிலவின் கிரணங்களைச் சங்கீர்த்தனமே எங்கும் பரப்புகிறது. அதுவே மேலான அனைத்து ஞானங்களைத் தரும் வாழ்வு. அதுவே பேரானந்த சாகரத்தைப் பெருக்குவது; நாம் எப்போதும் ஆவலோடு பருக விரும்பும் அமுதத்தின் சுவையைக் காட்ட உதவுவதும் அதுவேதான்.

Koviloor Digital Library

ஸ்ரீ பிரபுபாதாவும் அவருடைய சீடர்களும் நியூ யார்க் (யு.எஸ்.ஏ.) நகரத்தில் பகவானை ஏற்றி வழிபடுகிறார்கள்.

ஓ—எம்பெருமானே! உன்னுடைய புனித திருநாமம் மட்டுமே உயிர்வாழ்ப் பிராணிகளைக் கடைத்தேற்றுவதாகும். எனவேதான், நீ லட்சக் கணக்கில் கிருஷ்ணா, கோவிந்தா எனப் பெயர்களைக் கொண்டிருக்கிறாய். இத்தகைய தெய்விகப் பெயர்களில் உன்னுடைய அருள் சக்திகளை அடக்கி வைத்திருக்கிறாய். இருந்தும் உன் புனித நாமங்களைச் சொல்லி அழைப்பதற்குக் கட்டுத் திட்டங்கள் எதுவுமே இல்லை. பெயரைச் சொல்லி அழைக்குமுன்னே எளிதில் ஓடி வரக்கூடியவனாகவும் இருக்கிறாய். ஆனால் என்னை அந்தப் பெயர்கள் கவராமல் இருப்பதுதான் என்னுடைய துரதிருஷ்டம்!

உனது திருநாமத்தை ஓதுபவன் தன்னைத் துரும்பினும் துரும்பாகப் பாவித்துக்கொண்டு விநயத்துடன் இருத்தல் வேண்டும். மரத்தைக் காட்டிலும் பொறுமையாக, போலிக் கௌரவம் எதையும் பாராட்டாதவனாக இருப்பானாயின் அந்த மனநிலையில் உனது திருநாமங்களை இடையறாது அவனால் ஓதிக்கொண்டே இருக்க முடியும்.

எல்லாம்வல்ல பெருமானே! பொருள் சேர்க்கும் விருப்பம் எனக்கு இல்லை. அழகிய மங்கையரை அணையும் ஆசையும் எனக்குக் கிடையாது. என்னைப் பின்பற்றி வருவோரும் வேண்டியதில்லை.

Koviloor Digital Library

ஒவ்வொரு பிறவியிலும் உன் பணி ஒன்றையே செய்துகிடக்க நீ அருள வேண்டும். நான் அதை மட்டுமே வேண்டுகிறேன்.

நந்தகுமாரனே! நான் என்றென்றும் உன் அடைக்கலப் பொருள். அவ்வாறு இருந்தும் எவ்வாறோ நான் பிறவிப் பெருங் கடலில் தவறி விழுந்துவிட்டேன். ஆகவே கருணை கூர்ந்து என்னை இந்த மரண சாகரத்திலிருந்து கரையேற்றிக் காத்தருளி உன் பாதகமலங்களில் ஒரு தூசியாக என்னைச் செய்து கொள்வாயாக!

எம் பெருமானே! அன்பு பாஷ்பங்களால் என் கண் எப்போது நிறையும்? உன் திருநாமத்தை உச்சரிக்கும் போதெல்லாம் அந்தக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருக வேண்டும். என் பேச்சுக்கள் உன் திருநாமங்களை உச்சரித்தவண்ணமே இருப்பதால் திக்கித் திணறுவது எப்போது? என் உடலின் மயிர்க்கால்கள் அனைத்திலும் உன் பெயர்களை உரக்க ஓதுவதால் எப்போது கொப்புளங்கள் புறப்படும்?

ஓ கோவிந்தா! உன் பிரிவினால் ஒரு கணம் போவது எனக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் இல்லை, அதற்கு மேலே ஆவதுபோல் நான் உணருகிறேன். மழைப்பிரவாகம் போல் கண்ணீர் என் கண்களி லின்று பெருகி வடிகிறது. உலகில் நீ இல்லாத இடம் எனக்கு வெட்ட வெளியாகத் தோன்றுகிறது.

கிருஷ்ணனைத் தவிர வேறு எந்தப் பகவானையும் நான் அறியேன். அவன் எப்போதும் என் இறைவனாகவே இருந்து வருவான். அவன் என்னை முரட்டுத்தனமாக இழுத்தாலும் அணைத் தாலும் என் எதிரே இராமல் என் இதயத்தையே முறிய வைத் தாலும் அவன் எப்போதும் என்னுடைய இரைவனாகவே இருப் பான். அவன் எதை வேண்டுமானாலும் எல்லாவற்றையுமே வேண்டு மானாலும் தாராளமாகச் செய்யலாம். ஆனால் எந்தவித நிபந் தனையுமின்றி அவன் என் பூஜைக்குரிய பெருமானாகவே எப்போதும் இருக்கிறான்.

கோவிலூர் ஆதீனம்
Acc.No: 2356
கோவிலூர்-630 307

வடபழனி அச்சகம், சென்னை-600 026.

Koviloor Digital Library

ஸ்ரீமத் பாகவதத்தை உலகுக்கு வழங்கிய பகவான் ஸ்ரீ வியாஸ தேவருக்கு நாரத முனிவர் ஞானோபதேசம் செய்தருளுகிறார்.

Koviloor Digital Library

பக்திவேதாந்த புக் டிரஸ்ட்



அருள் திரு ஏ. ஸி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

தோற்றுவித்தவர்:

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்

Rs. 2/-